Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2010

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## வேதாகமத்திற்கு இசைவான முக்கிய போதனை


பாகம் - 1 : நாம் ஏற்றுக் கொள்ளக்கூடியவைகள் மற்றும் மறுக்க வேண்டியவைகள் •

பாகம் - 2 : நாம் செய்ய வேண்டியவைகள் •

பாகம் - 3 : மற்றும் சில பயனுள்ள போதனைகள் •

### வேதாகமத்திற்கு இசைவான முக்கியப் போதனை



# ஆதியிலே

"வேதாகமத்தின் அடிப்படையிலான முக்கியப் போதனைகள்" என்பதைப் பற்றிய பொருளில், ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்கு வேதாகமம் உறுதியாக அறிவிக்கக்கூடிய போதனைகளை எங்களால் முடிந்த வரைக்கும் விவரிக்க முயற்சித்திருக்கிறோம். இதற்கு தேவைப்பட்ட பெரும்பாலான போதனைகள் அறிவு சம்மந்தப்பட்டதாக இராமல், கிரியைகள் (செயலாற்றுதல்) சம்மந்தப்பட்டதாக இருப்பதைக் காணும்போது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துமா ?

நம்மில் அநேகர் இந்த போதனைகள் அவசியம் இல்லை என்று வேதாகமம் கூறக்கூடியவைகளுக்காக நம்மை நிராகரித்து விடுவதைக் காணலாம். (இந்த போதனைகள் உண்மையா இல்லையா என்று ஆராய்வது) ஆனால் கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து மற்றவர்களை வெளியேற்றுவதற்கு குறைந்த பட்சம் முக்கியமானப் போதனைகளை நாம் பயன்படுத்துவோமா ?

அறிவுக்கேற்ற போதனைகளை நாம் ஏற்றுக் கொள்வதா அல்லது நிராகரித்து விடுவதா ? வேதாகமம் என்ன கூறுகிறது ? என்பதை பாகம் - 1 விவாதிக்கிறது. "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்". என்பதைப்பற்றி *தேவன் உண்டு, அவர் பலனளிப்பவர்* என்ற தலைப்பின் கீழ் சம்பாஷிக்கப்படுகிறது. மேலும் நாம் நம்ப வேண்டிய சில அறிவுக்குரிய போதனைகளை *இயேசுவே கிறிஸ்து* என்ற கட்டுரையில் விவரிக்கிறோம். இவைகள் தேவனுக்கு அல்ல மனிதனுக்கே தேவைப்படுகிறது. ஆனால், *நாம் சிந்திக்கக்கூடாத காரியங்கள்* என்ற தலைப்பில் இரண்டு அறிவுக்குரிய போதனைகளை நாம் கட்டாயமாக தவிர்க்க வேண்டும் என்பதை மறுபடியும் வலியுறுத்தியிருக்கிறோம்.

அறிவுக்குரிய போதனைகளைக் கணக்கிடும்போது நிச்சயமாக செயலாற்றக்கூடிய போதனைகளைவிட அதிக எண்ணிக்கையில் காணப்படும். ஆகவே, அவசியமாக நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் குறித்து பாகம் - 2ல் சுருக்கமாக எழுதியுள்ளோம். இவைகள் நான்கு தலைப்புகளில் எழுதப்பட்டிருக்கிறது. *இருதயத்தின் போதனை, அவனுக்குரியதை அவனே சேகரித்துக் கொள்ளவேண்டும், தலையிலிருந்தும் கைகளிலிருந்தும் பாவங்களைக் களைந்து போடுதல் மற்றும் நாவுக்குக் கடிவாளம் போடுதல்..*

இன்னும் மற்ற பயனுள்ள போதனைகள் உண்டு, ஆனால் இவைகள் அனைத்தும் கிறிஸ்தவர்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவதில்லை. ஏனெனில், ஒருவேளை அவைகள் சற்றுக் குறைவாகவும் இருக்கலாம். அல்லது சுவிசேஷ யுகத்தின் சில பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகவும் இருக்கலாம். இவை அனைத்தும் பாகம் - 3ல் *தேவனுடைய பிரமாணத்தை கனப்படுத்துங்கள், பயனுள்ள போதனைகள்* மற்றும் *தீர்க்கதரிசனமான உபதேசங்கள்* என்ற தலைப்பில் விவரிக்கப்படுகிறது.

*விசுவாச அறிக்கைகள் மற்றும் வேதபடிப்பு* என்ற சிறிய கட்டுரை, கட்டாயமாக விசுவாச அறிக்கைகளை உருவாக்குவதற்காக சோதனைகளைப்பற்றி மேலோட்டமாக குறிப்பிடுகிறது. இதனால் தெரிந்தோ தெரியாமலோ இந்த விசுவாச அறிக்கைகள் தேவனுடைய வார்த்தைகளை விட மேலான நிலையை எடுத்துக் கொள்கிறது.

ஒவ்வொரு ஆங்கில ஹெரால்டு பத்திரிக்கைகளிலும் முன் அட்டைக்குள் காணப்படுகிற "வசனங்கள் நமக்கு தெளிவாகப் போதிக்கிறதாவது" (To Us the Scriptures Clearly Teach) என்ற தலைப்பை இறுதி கட்டுரை விவரிக்கிறது.

மனிதனுடைய பார்வையில் அல்ல, வேதாகமத்தின் பார்வையில் நாம் ஒரு கிறிஸ்தவனை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும் ? "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்." மேலும், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." (1யோவ 4:15, யோவ 13:35)

## செப்டம்பர்-அக்டோபர் 2010


**ஆதியிலே . . .** (வேதாகமத்திற்கு இசைவான முக்கியப் போதனைகள்) 1

**தேவன் இருக்கிறார், அவர் பலனளிப்பவர் . . .** 2

**பாகம் 1 :** தேவைப்பட்ட அறிவுக்குரிய போதனைகள்

**இயேசுவே கிறிஸ்து . . .** 4

**பாகம் 1 :** அப்போஸ்தலனாகிய யோவானிடமிருந்து தேவையான அறிவு

**நாம் சிந்திக்கக்கூடாத காரியங்கள் . . .** 8

**பாகம் 1 :** கிறிஸ்தவர்கள் எதை மறுக்க வேண்டும்?

**இருதயத்தின் போதனைகள் . . .** 10

**பாகம் 2 :** தேவைப்படுகிறகிரியைக்குரிய போதனைகள்

**தன்னை சார்ந்தவர்களுக்கான எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்தல் . . .** 14

**பாகம் 2 :** எல்லா மனிதர்களின் பார்வையிலும் கனத்திற்குரிய காரியங்கள்

**தலையிலும், கைகளிலும் உள்ள பாவங்களைக் களைந்து போடுதல் . . .** 17

**பாகம் 2 :** சிந்தையையும் பாவத்தையும் அகற்று

**நாவுக்கு கடிவாளமிடு. . .** 21

**பாகம் 2 :** அநீதி நிறைந்த உலகம்

**தேவனுடைய பிரமணங்களைக் கனப்படுத்துங்கள் . . .** 24

**பாகம் 3 :** இன்னும் சில பயனுள்ள போதனைகள்

**பயனுள்ள போதனைகள் . . .** 25

**பாகம் 3 :** காரணமும், விளைவும்


**தீர்க்கதரிசன உபதேசங்கள்** 28

**பாகம் 3 :** இன்னும் மற்ற பயனுள்ள போதனைகள்

**விசுவாச அறிக்கைகள் மற்றும் வேதபடிப்பு . . .** 32

உத்தேசங்கள் அல்லது நோக்கங்களின் ஆய்வு

**வசனங்கள் தெளிவாகப் நமக்கு போதிப்பது . . .** 34



பாகம்1 : வேதத்தில் அறிவுக்கு உகந்த முக்கிய போதனைகள்

# தேவன் இருக்கிறார், அவர் பலனளிப்பவர்

*தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் - எபிரேயர் 11:6*

**Carl Hagensick**

ஒரு எஜமான் தனக்கு மனநிறைவாக பணியாற்றுகின்றவர்களுக்குப் பலனளிப்பதுப்போல, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுபவர்களுக்கு அவர் பலனளிக்கிறார். மேலும் தனக்கு எதிராக இருப்பவர்களின் பெயரை சம்பளபட்டியலில் சேர்க்காததுப்போல, தேவனும் நாத்திகர்கள் மற்றும் மதம் சார்ந்த விஷயங்களில் துன்மார்க்கமாய் இருப்பவர்களை அவர்கள் போக்கிலேயே விட்டுவிடுகிறார்.

"முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில் - கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்." (11பேது 3:3-6) என்று பேதுரு கூறுகின்றார்.

"தேவன் துன்மார்க்கனை நோக்கி - நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும் என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு. சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய். " (சங் 50 :16) என்று மதம் சார்ந்த விஷயங்களில் துன்மார்க்கர்களாய் இருப்பவர்களைக் குறித்து சங்கீதக்காரர் கூறுகிறார்.

### விசுவாசித்தவைகளை வானியற் பௌதீகம் நிரூபிக்கின்றது

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறது // -மாயிருக்கிறது. " (சங் 19:1,7)" தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்" என்று சொல்லி, பூமியை ஆயத்தமாக்குவதற்கு முன்பாகவே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்துவிட்டார். (ஆதி 1:1-3) ஒரு நூற்றாண்டிற்கு முன்பு அண்டவியல் நிபுணர்கள் (ஐன்ஸ்டீன் உட்பட) இப்பிரபஞ்சத்திற்கு ஆரம்பம் இல்லை என்று திரளான முரண்பாடுள்ள கோட்பாடுகளால் நிரூபிக்க முற்பட்டனர். ஆனால் இப்பொழுதோ 14 பில்லியன் வருடங்களுக்கு முன்பாக சம்பவித்த அதிர்வெடி மூலம், பிரபஞ்சம் ஆரம்பமானது என்று துணைக்கோள் அளவு ஆராய்ச்சியின் மூலம் பொதுவாக ஒத்துக் கொள்ளப்படுகின்றது. வேதத்தின் மீது வைத்த எளிமையான விசுவாசம் பலனளிக்கப்படுகிறது. தற்செயலாகவும் தொடர்பின்றியும், அண்டசராசரமானது தன்னுள்ளடங்கிய ஒரு கோளில் உள்ள அறிவு ஜீவிகளுக்கு வாழ்வாதாரம் அளித்து, நிலைக்குலையாது தாங்கிப் பிடிப்பது என்பதற்குரிய சாத்தியக்கூறு -10ன் அடுக்கு 217 என்ற அளவில் ஒரு சதவீதத்தைக் (வாய்ப்பைக் ) காட்டிலும் குறைவாகவே உள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சாத்தியக்கூறு நம்பமுடியாத அளவு குறைவாக உள்ளது.

தற்செயலாக மனித ஜீவன்கள் மட்டும் தோன்றுவதற்கான சாத்தியக் கூறுகள் (அனுகூலங்கள்) என்னவாக இருக்கலாம் ? டாக்டர் மைக்கல் பிகி என்ற உயிரணு அறிஞரின் குறிப்புப்படி இரத்தம் உறையும் - தொடர் அமைப்பிற்குத் தேவையானவைகளில் பிளாஸ்மிநோஜன் மற்றும் அதனுடைய திசு பிளாஸ்மிநோஜன் ஆக்டிவேட்டர் என்னும் ஒரு ஜோடி புரதம், தானாக உருவாகி, ஒன்று சேர்வதின் சதவீதம் (வாய்ப்புகள்) என்பது $10^{18}$ x $10^{18}$=$10^{36}$ இதில் ஒரு வாய்ப்பைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. (முழு பூமிக்கு 10ன் அடுக்கு 50அணுக்களே உள்ளன) குறைந்த பட்சமாக 20-க்கு மேற்பட்ட புரதங்கள் தேவைப்படுகிற இந்த சிக்கலான இரத்தம் உறையும் தொடர் அமைப்பில் மேலே செல்லப்பட்ட ஒரு ஜோடி பிளாஸ்மிநோஜன் மற்றும் அதனுடைய திசு பிளாஸ்மிநோஜன் ஆக்டிவேட்டர் என்பது தேவைப்படும் (20) இருபதிற்கு மேற்பட்ட புரதங்களில் 2 மாத்திரமே என்பதையும், இன்னும் கல்லீரல், சிறுநீரகம், இரத்த ஓட்டம் மூளை போன்ற கீழ் அமைப்புகளும் உண்டென்றும் நாம் கவனிக்க வேண்டும். மேலும் இவைகளைப் பார்க்கும்போது தற்செயலாய் உருவாகும் வாய்ப்புகள் இல்லை என்ற கருத்து நம்பமுடியாத அளவு

பெருகி விடுகின்றது. மூலக்கூறு அளவிலும் (பிரிக்க முடியாத மிகச் சிறிய அணு) ஜீவன் பற்றின சோதனைகளைச் செய்யும், உயிரணு ஆராய்ச்சிகள் போன்ற திரளான முயற்சிகளின் விளைவு என்பது தேவனுடைய வடிவமைப்பு பற்றியதாக தெளிவான சத்தியமாகும். இதன் விளைவுகள் மிகவும் தெளிவாகவும், முக்கியத்துவம் உள்ளதாகவும் இருப்பதால், அறிவியல் வரலாற்றில் பெரும் சாதனையாக இது வரிசைப்படுத்தப்பட வேண்டும் என்று பிகி முடிவு செய்கின்றார். "அவர் இருக்கிறார்" என்பதற்கு தேவன் முழு ஆதாரத்தையும் வைத்திருக்கிறார்.

இஸ்ரயேல் புத்திரர்கள், மோசேயிடம் பேசின தேவனின் நாமம் என்ன என்று கேட்கும் பொழுது, "இருக்கின்றவராகவே இருக்கிறேன்" என்று சொல்ல தேவன் கூறினார். இஸ்ரயேலை அடிமைத்தனத்தினின்று விடுவிக்க அவர் விரும்புகின்ற யாவையும் அவரால் செய்ய முடியும், செய்வார் என்று இஸ்ரயேலுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில்தான் இதன் பொருள் விளங்குகின்றது. உண்மையாகவே எந்த ஒரு மனிதனும் 10 வாதைகள், மற்றும் 6 மணி நேரம் கடல் பிரிந்து காணப்பட்டதை கற்பனைக் கூடப் பண்ணியிருக்க முடியாது. மேலும் மனிதனுடைய எந்த ஒரு திட்டத்தைக் காட்டிலும், இது ஆற்றல் மிக்கதாய் காணப்பட்டது. மேலும், மில்லியன் கணக்கில் காணப்பட்ட இஸ்ரயேலர்களுக்கு செய்த தேவன், வரப்போகும் யுகத்தில், பூமியில் இருக்கும் பில்லியன் கணக்கானவர்களுக்கு கூடச் செய்ய முடியும்.


## சிறைச்சாலைக்குள் ஒரு நேர்மையான அடிமைக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சி

வாலிபனான ஒருவனை, அவனுடைய சகோதரர்கள் அடிமை வியாபாரிகளிடம் விற்றுப்போட்டார்கள், முடிவாக அவன் இன்னொரு தேசத்தில் தவறாக சிறையில் அடைக்கப்படுகின்றான். ஆனால் அது இராஜாவினுடைய சிறைச்சாலையாக இருந்தது. சிறப்பான பல்கலைக்கழகங்களில் கற்பதைக் காட்டிலும் இங்கு அரசாங்கத்தைப்பற்றி அதிகமாகக் கற்றுக்கொள்ளலாம், அவனுடைய பெயர் யோசேப்பாய் இருந்தது. மேலும் புதிதாக நியமிக்கப்பட்ட பார்வோனின் ஆட்சியின் துவக்க கட்டத்தில் இவன் மன்னிக்கப்பட்டு, எகிப்துக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டான். (ஆதி 37:41) தேவ கிருபையால் அவனுடைய நேர்மையான குணத்திற்குப் பலனளிக்கப்பட்டது. முடிவாக அவனுக்கு நேரிட்ட எல்லா தீங்குகளுக்கான பலன் நன்மையையும் அவன் பார்க்க நேரிட்டது. பெரிய விளைச்சல்கள் இருந்த முதல் 7 வருடங்களிலும், அவன் பேயம் மாவட்டத்தில் 35 சதுர மைல்கள் அளவில் புதிய பண்ணையைக் கட்டி, அதில் அதிக பட்சமான உற்பத்தியை சேகரித்து வைத்தான். உற்பத்தியின் மதிப்பளவும் குறிக்கப்பட்டிருந்தது. மேலும் அதைத் தொடர்ந்து வந்த 7 வருட பஞ்சக் காலங்களில், முழுவதும் நிரப்பப்பட்ட நிலையில் இருந்த பார்வோனின் களஞ்சியங்களிலிருந்து தானியங்கள் சீதோன் முதல் லீபனோன் வரையிலான அண்டை தேசங்களுக்கும் மற்றும் எகிப்தை போஷிக்கவும், விற்பனைக்குத் திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறாக யோசேப்பு உலகத்தாரையும், குறிப்பாக அவருடைய சகோதரர்களைக் காப்பாற்ற பயன்படுத்தப்பட்டதினால், இவர் முழு உலகத்தின் இரட்சகரான இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாக இருக்கின்றார்.

இதை போலவே, தானியேலும் தேவனுடைய பிரமாணங்களை மீறுவதற்கு மறுத்தபோது, அவருடைய சாவுக்கேதுவான எதிரிகள், தங்களின் ஜீவனை இழந்தப் போதிலும், தானியேலையோ தேவன் பாதுகாத்தார். யோசேப்பு சொப்பனத்திற்குரிய விளக்கத்தை அளித்து, இராஜ்யத்தில் இரண்டாம் நிலை பதவிக்கு உயர்த்தப்பட்டது போலவே தானியேலும் சொப்பனத்தின் பொருளை அறிவித்து, இராஜ்யத்தின் மூன்றாம் நிலை பதவிக்கு உயர்த்தப்பட்டார். தானியேல் - கிறிஸ்துவின் சரீரம் என்றும் கிறிஸ்துவின் மணவாட்டி என்றும், உடன் ஆசாரியர்கள் என்றும் வெவ்வேறாக விவரிக்கப்பட்டு, அண்ட சராசரத்தில் மூன்றாம் நிலை பதவியைப் பெறுகிறவர்களான உண்மையான சபைக்கு அடையாளமாய் உள்ளார். சபை உண்மையுள்ளவர்களாக இருந்தபடியால், இவர்கள் இயேசு கிறிஸ்துவுடன் சேர்ந்து பூமியின் எல்லாக் குடிகளை உயிர்ப்பிக்கவும், ஆசீர்வதிக்கவும் செய்யும் பலனை கிருபையாய் பெற்றுக் கொள்வார்கள்.

இன்னும் அநேகருடைய விசுவாசம் பலனளிக்கப்பட்டுள்ளது. கானானின் இராஜா இரதங்கள் மீது விசுவாசம் கொண்டிருந்தான், ஆனால் தெபோராளோ அந்த இரதங்கள் நகர்ந்து செல்ல முடியாத அளவுக்கு தேவையான பெருவெள்ளத்திற்காக , தேவன் மீது விசுவாசம் வைத்தாள். தீயின் வல்லமையை தணிய வைப்பதன் மூலம் தேவன் அந்த மூன்று எபிரேயர்களுக்கு பலனளித்தார். ஸ்தேவானின் மரிக்கும் தருவாயில் உள்ள ஜெபமானது தர்சு பட்டணத்தின் சவுலுக்கு ஆதாயமாய் இருந்தது. எல்லாவற்றையும் விவரமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் இதில் இடம் போதாத நிலையில் உள்ளது.

தன்னை அங்கீகரிக்க மறுக்கும் ஒரு மனுஷனுக்கு இராஜா பலனளிப்பானோ ? பலன் கொடுக்கவேண்டுமோ? மனுஷன் சிருஷ்டிக்கப்படும் முன்பே தேவன் எல்லோருக்காகவும் திட்டம் தீட்டியுள்ளார். ஆகையால் அவரே தேவன் என்றும் நாம் எவ்வளவுக்கு அதிகமாக அவருக்கு பணிவிடைச் செய்ய நாடுகின்றோமோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவர் நமக்குப் பலனளிப்பார்.



அப்போஸ்தலனாகிய யோவானிடமிருந்து தேவையான அறிவு

# இயேசுவே கிறிஸ்து

*இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து..... இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான், பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான். - 1யோவான் 2:22, 5:1*

Oscar Elbert

"நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று" இயேசு கேட்டதற்கு "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு பதிலளித்தார். அப்பொழுது "இயேசு அவனை நோக்கி - யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்." (மத் 16:16,17) என்று சொன்னார். இயேசுவின் வார்த்தைகள் ஆழமான அர்த்தம் கொண்டிருந்தது. மேலோட்டமான அறிவினால் அவரை அறிந்து கொள்வதைக் காட்டிலும் அவரை "கிறிஸ்துவாக" இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். நம்முடைய அறிவின் கண்கள் திறக்கப்பட்டு, விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்து நமக்கு என்னவாக இருக்கிறார் என்பதற்கும், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதன் பொருளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கும் மனிதனுடைய மாம்சீக ஞானத்திற்கு அப்பாற்பட்ட,தெய்வீக வழிநடத்துதல் நமக்கு மிக அவசியமாக தேவைப்படுகிறது.

மேலும் அவரை அறிந்துகொள்வதற்கும், இன்னும் உண்மையாக அறிந்துகொள்வதற்கும், நாம் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட காரியம் மட்டும் போதாது. நாம் ஒரு ஆவிக்குரிய ஜீவியத்தில் சீராக வாழ்ந்து கொண்டிருக்கும், அவருடைய பக்தியுள்ள சீஷர்களாக இருந்தாலும் அவரைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. அவரை முழுமையாக அறிந்துகொள்ள நமக்குள் நித்திய ஜீவன் மிக அவசியம். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்." (யோவ 17:3)

கிறிஸ்தவ விசுவாசத்தின் சாரம் - கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கிறது. அறிவுப்பூர்வமான புரிந்துகொள்ளுதல் தேவைப்பட்டாலும் நாம் புரிந்துகொண்டதை மதிப்பிடவேண்டும். நாம் பெற்ற விசுவாசத்தை முழு இருதயத்தோடு செயலாற்றி அவருக்குள் இருக்கும் நம்முடைய ஐசுவரியமுள்ள கிருபைகளை இறுக பற்றிக்கொள்ள வேண்டும். நம்முடைய கிறிஸ்துவுக்குள்ளான குணங்கள் வளர்ச்சி அடையவும், சீராகக் கட்டப்படவும், இந்த கிருபையின் வரங்கள் நமக்குக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய விசுவாசம் என்னும் மாளிகை கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் கட்டப்படுகிறது. ஆனால் எவ்வளவு சுறுசுறுப்பாகவும் ஜாக்கிரதையாகவும், நம்முடைய வாழ்க்கை முழுவதும் நம்முடைய குணலட்சணங்கள் வளர்ச்சியடைய பாடுபட்டாலும், தேவன் நம்மை ஏற்றுக் கொள்வதற்கான, நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் மேல் வைத்திருக்கும் விசுவாசம் தொடர்ந்து வளர்ச்சி அடையவில்லை என்றால், நாம் படும் பிரயாசம் அனைத்தும் சரிந்துவிழும்.

"ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது. விழுந்து முழுவதும் அழிந்தது.." (மத் 7:24-27)என்று இயேசு சொன்னார்.

"எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம்போட்டேன். வெறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும், நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான், அவனோ இரட்சிக்கப்படுவான், அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்." (1கொரி 3:10-15) என்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய ஆண்டவரின் போதனைகளை எதிரொலிக்கிறார்.

ஆகவே, சந்தேகத்திற்கு இடமில்லாமல், இயேசுவே தேவனுடைய கிறிஸ்து என்ற அறிவு மிக அவசியமானது.

"கிறிஸ்ட்டோஸ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "கிறிஸ்து" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த கிரேக்க வார்த்தை "மேசியா" என்ற எபிரெய வார்த்தைக்கு சமமானது. இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் - "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். தீர்க்கதரிசிகள், ஆசாரியன் மற்றும் இராஜாக்கள் மட்டுமே அபிஷேகிக்கப்பட்டார்கள் என்று வசனம் கூறுகிறது. இயேசு

உண்மையாக தேவனுடைய கிறிஸ்துவாக இந்த மூன்று பதவிகளுக்காக அபிஷேகம் பண்ணப்பட்டவர்.

### இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டார்

கிறிஸ்துவைப்பற்றி கிரேக்கர்களின் தத்துவங்கள் உட்புகுவதை அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய நிரூபத்தில் வன்மையாக எதிர்த்தார். சபையில் உள்ளசில போதகர்கள் கிரேக்க தத்துவங்களையும், தவறான விஞ்ஞானத்தையும் நம்பி (1தீமோ 6:20) கிறிஸ்துவைப் பற்றி அநேக தத்துவங்களைப் போதிக்கத் துவங்கினார்கள். அறிந்தோ அறியாமலோ, அவர்களின் போதனைகள் சுவிசேஷத்தைக் கலப்படமாக்கியது.

ஆதியில் ஏற்பட்ட அந்த கலப்படமான சுவிசேஷத்தை அநேக விசுவாசிகள் நம்பி, அதன் விளைவாக அதையே போதித்தும் வந்தனர். இது பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து "மனுஷ போதனை" என்ற தவறான உபதேசத்திற்கு வேரிட்டு, உண்மையான விசுவாசத்திலிருந்து அனைவரையும் சாய்த்து வழிவிலகச் செய்தது. "...கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பயித்தியமாயும் இருக்கிறார். " (1கொரி 1:22,23, 11தெச 2:3)

கிரேக்க தத்துவமானது வெளிப்புறமான இராஜ்யத்தின் காரியங்களை அலட்சியப்படுத்திவிட்டு, "ஆவிக்குரிய ரூபங்களின் பூரணப்படுதலுக்குரிய திட்டங்களை" மட்டும் போதித்தது - காணக்கூடிய உலகம், சத்தியத்திற்கு விரோதமாக இருக்கிறது என்று எண்ணினார்கள். இதன் அடிப்படையிலுள்ள சிந்தனைகளினால் வரும் இந்த தததுவங்களை நம்பி மனம் மாறினவர்களுடைய எண்ணிக்கை கிறிஸ்துவ சபையில் அதிகரித்தது. அவ்வப்பொழுது சில அறிவுப்பூர்வமான காரியங்கள் தலைத் தூக்கியது. அநேகர் இதை புரிந்துகொண்டு கிறிஸ்துவின் நிலையை ஏற்றுக் கொண்டார்கள்.

சிலுவை அதாவது மனிதனாக கிறிஸ்து இயேசு கொடுத்த ஈடுபலி அவர்களுக்கு பயித்தியமாகத் தோன்றியது. கிறிஸ்துவின் பலி ஒரு ஆவிக்குரிய "மாதிரி" என்று அவர்களின் சிந்தை எடுத்துக் கொண்டது. ஒரு மனிதனின் மரணம் இரத்தம் சிந்துதல், பலி செலுத்தப்பட்ட மாம்சம் முழு உலகத்தின் பாவங்களை மன்னிக்கும் என்ற காரியம் அவர்களின் பார்வைக்கு பயித்தியமாகத் தோன்றியது. ஆகவே கிறிஸ்துவ போதனைகளுக்குள் உலக இரட்சகரான புதிய - பிளேட்டோனிக் பற்றிய தத்துவங்களைப் புதிதாக புகுத்தினார்கள். "தெய்வ - மனிதனால்" மட்டுமே மனுக்குலத்திற்கு இரட்சிப்பைக் கொடுக்க முடியும் என்ற கருத்தை அறிமுகப்படுத்தினார்கள்.

அவர்களின் முயற்சி மிகப்பெரிய அளவில் தீங்கை விளைவித்தது. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒப்புரவாகுவதற்கான வல்லமை, இயேசு சிந்திய இரத்தத்தினாலும், அவர் பலி செலுத்திய மாம்சத்தினாலும் மட்டுமே கொடுக்கப்படுகிறது என்ற தெளிவான வேதவசனங்களின் மேல் உள்ள விசுவாசத்திலிருக்கும் சபையை இந்த போதகர்கள் முழுமையாக திசை திருப்பினார்கள். இன்று அநேகர் சாட்சியாக "இரத்தத்தின் வல்லமை" என்று பாடினாலும், ஆதிகாலத்தில் இரத்தத்தின் உண்மையான வல்லமையை திருடிவிடுகிறது. சத்தியம் மிக எளிமையானதும், வல்லமையானதுமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் தலைப்பு பாடங்கள் இயேசுவின் பலியின் உண்மையான பலனைக் குறித்து மிக நேர்த்தியான சாட்சியை வெற்றிகரமாகத் தருகிறது. சிலவற்றை நாம் காணலாம்.

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோவ 6:51)

"இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படு கிறார்கள்....இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக் கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டு....." (ரோம 3:24,25)

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."(ரோம 5:8,9)

"தேவதூதரைக்குறித்தோ - தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது. "(எபி 1:7)

"அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும், பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படா தவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். " (கொலோ 1:20-22)

### கிறிஸ்துவுக்கு பதிலாக - அந்திகிறிஸ்து

"மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல, வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்து வினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது." (1யோவ 4:3)

"அந்திக்கிறிஸ்து" என்பதற்கு, கிறிஸ்துவை எதிர்த்து அல்லது எதிராளி என்று அநேகரால் இன்று அதிகமதிகமாக சிந்திக்கப்படுகிறது. ஆதியில் உள்ள கிரேக்க மொழியில் இந்த சிந்தனைகளுக்கு சற்று வித்தியாசமான கருத்து அறிவிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின் மூலப் பிரதிகளில் அந்திக்கிறிஸ்து " ஆண்டிகிறிஸ்ட்டர்" என்பதற்கு "கிறிஸ்துவுக்குப் பதிலாக" என்ற பொருள் தருகிறது. (see Vines Expository Dictionary of New Testament Words)கிரேக்க

தத்துவங்கள் கிறிஸ்துவின் இரத்தம் சிந்துதல் மற்றும் அவர் மாம்சத்தின் பலியினால் வந்த ஒப்புரவாகுதலை வேறு கோணத்தில் தீர்மானிக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குப் பதிலாக வேறொரு தத்துவம் சமர்ப்பிக்கப்பட்டதை வேதாகமத்தில் காணலாம். அவர் தன்னுடைய இரத்தத்தினால் நம்மை இரட்சித்தார். ஆகவே அந்திக்கிறிஸ்துவின் ஆவி (கிறிஸ்துவின் ஆவிக்குப் பதிலாக) உலகத்தில் அவருடைய நாட்களிலே கிரியை செய்து வந்ததை யோவான் கவனித்திருக்கிறார்.

இப்படிப்பட்ட கருத்துக்களைக் கேள்விப்பட்ட சபையின் மூப்பர்கள் - தெய்வ - மனுஷன் பாவிகளின் இடத்தில் நிற்கவேண்டும் என்றும், சிலுவையின் பலன் தெய்வீகமானது என்றும், மற்றபடி இரத்தம் சிந்துதலின் மதிப்பும், கிறிஸ்துவின் ஈடுபலி, மேன்மையான போதகங்களுக்கும் உண்மையாக முக்கியம் பெறவில்லை என்ற கருத்தை உடனடியாக தழுவினார்கள். (1தீமோ 2:5,6, ஓசி 13:14) உண்மையான சத்தியம் விசுவாசிகளிடம் தொலைந்து போனது. "மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான்." (11யோவ 7)

தேவனுடைய நீதியின்படி இயேசு, ஆதாமின் பாவத்திற்காக, என்றும் கிறிஸ்துவின் ஈடுபலியின் கிரியை முழு அண்டசராசரத்திற்கும் தேவனோடு ஒப்புரவாக்குவதற்கான வழி என்று வேதாகமம் கண்ணோக்குகிறது. "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரி 15:22) ஆதாமிலிருந்து தோன்றின ஒவ்வொரு புருஷரும், ஸ்திரீயும், குழந்தையும் ஈடுபலியின் நன்மைகளைப் பெற்றுகொள்வார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது. "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." (ரோ 5:18)

ஏனெனில் இந்த புதிய போதனை, பலியின் மதிப்பை "தத்துவ சாஸ்திரம்" என்று போதித்ததினால் பலியின் உபயோகத்தை அவர் மனம்போன போக்கில் தன்னிச்சையாகப் போதித்தார்கள். கிறிஸ்துவின்பலி அனைவருக்காகவும் கொடுக்கப்பட்டது என்று சொல்லுவதற்குப் பதிலாக அவரை ஏற்றுக் கொள்பவர்களுக்கு மட்டுமே அது பயனுள்ளதாக இருக்கும் என்பதற்காக இப்படி சொல்லப்பட்டிருக்கிறது. யேகோவா தேவன் சிலுவையில் மரித்ததினால் அந்த சிலுவை பயனளிக்கக்கூடியதாக இருக்கிறது என்று வேதாகமத்தில் உள்ள எந்த ஒரு வசனமும் குறிப்பிடுகிறதில்லை. (தேவன் மரிக்க முடியாது) ஒப்புரவாகுதலை புரிந்துக் கொள்ள "விஞ்ஞான" முறைகள் புதிய கூற்றுகளை ஊக்குவிக்காமல் அதை வலுவற செய்து, அதன் அஸ்திபாரத்தை நிலைக்குலைய செய்தது. கிறிஸ்துவின் பலியின் செயல்பாடுகள் வசனங்களில் எங்காகிலும் அளவிடப்பட்டிருக்கிறதா ? ஆனால் இயேசு "அனைவருக்காகவும்", "எல்லாருக்காகவும்" மரித்தார் என்பதை அநேக வசனங்கள் தெளிவாகக் காட்டுகிறது. (11கொரி 5:15, 1தீமோ 2:4-6, எபி 2:9)

மனிதரால் ஏற்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கைகள் நாளுக்குநாள் சத்தியத்தை விட்டு வெகு தூரம் சென்றது. இப்படியிருக்கையில், இவைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளாதவர்கள் மிகக் கடுமையாகத் தொடர்ந்து பயமுறுத்தப்பட்டார்கள். மொத்த தவறுகளின் தீய விளைவாக

வசனங்களின் அடிப்படையில், இயேசு யேகோவாவின் மூன்றாவது பாகம், அதாவது சம வல்லமையும், சம ஜீவனைக் கொண்டிருக்கிறார் என்ற விசுாசத்தைக் கட்டாயப்படுத்தினார்கள்.

ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்குமுன் அவர்கள் கட்டாயமாக விசுவாச அறிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்துக்களும், அதன் முக்கியத்துவங்கள், பயமுறுத்தல்கள் போன்ற காரியங்களுக்கு எந்தவிதமான வசன ஆதாரங்கள் காணப்படுகிறதில்லை. "நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு எங்களோடு இணைந்து கொள்ளுங்கள்." மேலும், "நாங்கள் சொல்லும் காரியங்களை அப்படியே நம்பவேண்டும்" இந்த இரண்டு கருத்துக்களுமே அந்திக்கிறிஸ்துவின் அசுத்த ஆவியின் தூண்டுதலாகும்.

## தேவனுடைய குமாரன்

இயேசு தேவனுடைய குமாரன். அவர் தாமே தேவன் அல்ல. குமாரன் என்ற வார்த்தையின் முதல் எழுத்தை அச்சாக எழுதப்பட்டிருப்பதினால் குமாரன் என்ற நிலையைவிட மேம்பட்டது என்பதால் குமாரனாகிய இயேசுவே தேவனாக அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் இயேசு தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகையில் அவர் தாவீதாக இருக்க முடியுமா ? அப்படியே குமாரன் என்று அழைக்கப்படுகிறவர் தேவனாக இருக்க முடியுமா ? புதிய ஏற்பாட்டின் மூலப்பிரதிகளில் எந்தவிதமான அச்சான வார்த்தைகளும் (bold letters)காணப்படுவதில்லை. இப்படியாக எழுத்துக்களை மேன்மைப்படுத்துவது வெறும் மனித ஞானத்தில் வந்த கண்டுபிடிப்புகளே. ஆனாலும் புது மொழிபெயர்ப்புகள் அல்லது பதிவுகளில் இயேசு தேவனுடைய "குமாரன்" என்று தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

"தேவனுடைய குமாரன்" என்பது தேவனையே குறிக்கக்கூடியதாக இருந்தால் லூக்கா சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட வம்சவரலாறு முரண்பாடாக இருக்குமே. "ஆதாம் தேவனுடைய குமாரன் - (திருத்திய மொழிபெயர்ப்பில்) " (லூக் 3:38) "தேவனுடைய குமாரன் " என்பவர்கள் தேவனாக இருந்தால், ஆதாமும் தேவனாக இருக்கவேண்டும். ஆனால் இது உண்மையில்லையே.

## இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதல்

"பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்." (1யோவ 4:14,15)

இயேசுவை தேவன் என்று அறிக்கையிடாமல் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும் என்ற அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். இங்கு ஒரு முக்கியமான வித்தியாசம் காணப்படுகிறது.

"வெஸ்ட்டுமினிஸ்ட்டர் அறிக்கையில்" (மனித யோசனை) உள்ள பயமுறுத்தலை கேட்கும் போதும் நாம் ஸ்தம்பித்து விடுகிறோம். ஆனால் -இயேசு அனைவருக்காகவும் மரித்தார் - என்ற வேதாகமத்தின் எளிமையான சத்தியத்தைக் கேட்கும்போது நிச்சயமாக நாம் அசைக்கப்படுகிறோம்.

இயேசு தன்னையே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்து இந்த முழு உலகத்திற்கும் ஒப்புரவாகுதலை ஏற்படுத்தினார் என்ற இந்த விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவமண்டலத்தின் விசுவாச அறிக்கைகள் ஏற்படுத்தின விளைவுகளுக்கு ஒப்பிடமுடியாத அளவுக்கு வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள உண்மைகள், சமாதானம் மற்றும் மகிழ்ச்சி ஆழமாக சாட்சியளிக்கிறது. பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனை இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக அனுப்பினார். விசேஜமாக நாம் - "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." (யோவ 3:16,17)என்று வாசிக்கிறோம்.

"தேவ - மனுஜன்" என்ற தத்துவமுள்ள விசுவாச அறிக்கைகள் இதுவரைக்கும் பொதுவாக பத்தில் ஒரு பகுதியான மனித இனத்திற்கு பயன் அளித்திருக்கலாம். ஆனால் இயேசுவின் ஈடுபலி அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. இக்காலத்தில் கிறிஸ்துவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பில் அழைக்கப்பட்டிருந்தாலும், வருங்காலத்தில் தேவனுடைய இராஜ்யத்தில் மீதியுள்ள மனுக்குலம் தேவனிடம் வருவதற்காக பரிசுத்தமான பெரும்பாதை திறக்கப்படும். (ஏசா 35:8, அப் 15:17)

இயேசு இந்த உலகத்தின் இரட்சகர் என்று நாம் சாட்சி அளிக்கிறோம். இனி வருங்காலத்தில் மீதியுள்ள மனுக்குலத்திற்காக வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் நம்முடைய இருதயங்களை இலகுவாக்கி நமக்குள் இருக்கும் தேவஅன்பை அதிகரிக்கிறது. இது நம்மை அவரிடம் இழுத்துச் சென்று, நாம் அவரிலும், நம்முடைய விசுவாசத்தினால் அவர் நமக்குள்ளும் வாசம் செய்ய வழிவகுக்கிறது.

### மேலும் கிறிஸ்துவை அறிக்கையிடுதல்

"தேவ ஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால் - மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல, வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது." (1யோவ 4:2,3)

கிறிஸ்துவின் ஈடுபலியை அறிவுப் பூர்வமாக புரிந்துகொள்ளுதலுக்குக் கூடுதலாக, விசுவாசத்தின் முக்கியமான ஒரு கடமையும் உள்ளது. நாம் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு முன்பாக அறிக்கையிட வேண்டும். இது நம்முடைய சொந்த நன்மைக்காக செய்ய வேண்டியதாக இருக்கிறது. மற்றவர்கள் முன்பாக நாம் அவருடைய பரிசுத்தமான நாமத்தை அறிக்கை செய்யும்போது, நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருப்போம். அவர் வந்த காரணத்திற்காகவே நாமும் நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளுகிறோம். நாம் துன்மார்க்கத்தை வெறுத்து, நீதியை நேசிக்கிறோம் என்பதை இதன் மூலம் உறுதி அளிக்கிறோம். நம்முடைய விழுந்துபோன சரீரம், நம்முடைய பாவமான மனுஜ இயல்பும் தன்னுடைய பெயரைச் சொல்ல வெட்கப்படும். ஆகவே இந்த உலகத்திற்கு மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தை நாம் வெளியரங்கமாக அறிக்கை செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.


இப்படியாக அறிக்கை செய்பவர்களின் நிலையையும், அறிக்கை செய்யாதவர்களின் நிலையையும் குறித்து தெளிவாக இயேசு கூறுகிறார். "மனுஜர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஜர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்." (மத் 10:32,33) மற்றொரு சந்தர்ப்பத்தில் இன்னும் உறுதியான வாக்கியங்களைக் கூறியுள்ளார் - "ஆதலால் விபசாரமும் பாவமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஜகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்." (மாற் 8:38)

ஆண்டவராம் இயேசு நம்முடைய சார்பில், நம்முடைய விசுவாசத்தை பிதாவுக்கு முன் அறிக்கை செய்தால் எவ்வளவு சந்தோஜமாக இருக்கும். அதே நேரத்தில் நம்மால் அவர் அவமானப்பட்டால் எவ்வளவு வேதனையாக இருக்கும். இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்வதை பற்றிய கோட்பாட்டை பவுல் நன்கு அறிந்திருந்தார். "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்." (ரோம 10:9,10) விசுவாசம் கிரியைகளினால் வெளிப்படுத்தப்படவேண்டும், இல்லாவிட்டால் அது செத்ததாயிருக்கும். (யாக் 2:14-20)

நம்முடைய விசுவாச ஜீவியம் மதுரமானதும், திருப்தியானதுமாக இருக்கிறது. இயேசு தேவனுடைய கிறிஸ்து என்ற அடையாளத்தோடு இது துவங்குகிறது. நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையின் துவக்கத்தில் நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தோம். அந்த மகிழ்ச்சி நிலையாகவும், ஒரே விதமாகவும் இருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் இது ஆழமாகவும், உறுதியாகவும் வளர்ந்து கொண்டே போகிறது. அவர்மேல் உள்ள வாஞ்சையும், அவர்மேல் நாம் வைத்துள்ள அன்பும், அவருக்காக நாம் அதிகமாக எதிர் பார்க்கும் காரியங்களுமே இதை வெளிப்படுத்தும் - உண்மையான கிறிஸ்து இயேசு , தேவனுடைய குமாரன்.

கிறிஸ்தவர்கள் எதை மறுக்க வேண்டும்

# நாம் சிந்திக்கக்கூடாத காரியங்கள்



*.... இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன்.... - வெளி 2:24*

நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதன் நிமித்தம் சில காரியங்களை விசுவாசிக்கவேண்டும் ஆனால் சில காரியங்களை நாம் விசுவாசியாமலும் இருக்கவேண்டும்.

தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஜீவனைக் கொடுத்தபின் அவர்களுக்கு ஒரு சட்டத்தையும் கொடுத்தார். (ஆதி 2:16,17) அந்த மனிதன் (ஆதாம்) மூலமாக பாவம் உலகத்திற்குள் நுழைந்தது. அந்த பாவத்தின் வழியாக மரணமும், அந்த மரணம் முழு மனுக்குலத்தையும் ஆட்கொண்டது. (ரோ 5:12) ஆயினும், இவ்வாறு ஆகாதபடிக்கு "எங்களுக்குள் பாவமில்லை, ஆதாமின் பாவத்தினாலே சாகிறோம்" என்று சிலர் கூறுகிறார்கள். ஆகவே தேவன் மோசேயின் மூலம் இஸ்ரயேல் ஜனங்களிடம் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். இந்த பிரமாணத்தைப் பரிபூரணமாக பாவமில்லாமல் ஒருவர் கடைபிடிக்கும் வரைக்கும் அவருக்கு ஜீவன் கொடுக்கப்படும் என்று வாக்களிக்கப்பட்டது. (லேவி 18:5, கலா 3:12)

ஆகையால், அனைத்து இஸ்ரயேல் ஜனங்களும் தங்களை பாவமுள்ளவர்கள் என்பதையும், நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அபாத்திரர்கள் என்பதையும் அறிந்துகொண்டார்கள். தேர்ச்சி பெற்ற பழங்கால பரிசேயராகிய பவுல் - "இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக் கக்கண்டேன்" (ரோம7:10) என்கிறார். இந்த நியாயபிர மாணத்தின் வழியாக கிடைக்கும் நித்திய ஜீவன் போலியான நம்பிக்கையாக இருந்தது.

ஆயினும், இந்த நியாயபிரமாணம், ஜனங்களை நித்திய ஜீவனைப் பெறக்கூடிய நம்பிக்கைக்குரிய வழியில் நடத்தியது. "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினால்.... " நாமும் இந்த ஜீவனைப்பெற வாய்ப்பு கிடைத்தது. (1தீமோ 2:3-6) இப்படியாக, நியாயபிரமாணத்தின் வழியாக அல்ல கிறிஸ்துவின் வழியாக மட்டுமே நித்திய ஜீவனைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. மேலும் நாம் நியாயபிரமாணத்தினால் நீதிமானாக்கப்பட முடியும் என்ற காரியத்தை எப்போதும் நம்பக்கூடாது என்று பவுல் கூறுகிறார். "நியாயபபிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்." (கலா 5:4)

இரண்டாவதாக உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று அல்லது முடிந்துவிட்டது "என்ற காரியத்தை நாம் நம்பக்கூடாது." அவர்களுடைய வார்த்தை அரிபிளவைை யப்போலப்படரும், இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்ட வர்கள். அவர்கள் சத்தியத்தை விட்டுவிலகி, உயிர் தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்." (11தீமோ 2:17,18, 1தீமோ. 1 :19-20)

உயிர்த்தெழுதல் ஒரு வரலாறு, இது நடந்து முடிந்தது என்று இந்நாளிலும் சிலர் கூறுகிறார்கள். உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று இருவர் (அலக்சாண்டாரக இருக்கலாம்) எப்படியாக சொன்னார்கள் என்று பவுல் எங்கும் விவரிக்கவே இல்லை. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மைக்கு பல ஆதாரங்கள் உண்டு. ஒரே நேரத்தில் ஐந்நூறு பேருக்கு அதிகமானோருக்கு அவர் தரிசனமானார் என்பது ஒரு முக்கிய ஆதாரமாக இருக்கிறது. ஸ்தேவான் கொல்லப்பட்டபின் மரித்தோரிலிருந்து அவர் திரும்பினதை ஒருவரும் காணவில்லை. ஆகவே இனி எந்தவிதமான உயிர்த்தெழுதலும் இருக்க வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு ஜனங்கள் வந்திருப்பார்கள். இப்படிப்பட்ட குழப்பான சிந்தைகள் எழும்பினதால், காலத்திற்கு ஏற்றதும், இதற்கு எதிரான வாதத்தையும் பவுல் முன்வைக்கிறார் -"கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுத லில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம் ? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லா விட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்க வில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர்கள் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிகொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்." (1கொரி 15 :12-17)

## மறுக்க வேண்டிய மற்றும் சில முக்கியமான காரியங்கள்

மற்ற காரியங்கள் வலுக்கட்டாயமாக தவிர்க்கவேண்டியதாக இருக்கிறது. "சாத்தான் ஆதிமுதல் கொண்டு மனுஷ கொலைபாதகனாக இருக்கிறான்...அவன் பொய்யனும், பொய்க்கு பிதாவுமாக இருக்கிறான்" என்று இயேசு சொன்னார். (யோவ 8:44,45) "நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதி 3:4, வெளி 12:9) என்று சாத்தான் ஏதேன் தோட்டத்தில் சர்ப்பத்தின் மூலமாகப் பேசின முதல் பொய் இங்கு குறிப்பிடப்படுகிறது. ஆகவே வேதத்தை விசுவாசிப்பவர்கள் -" இனி மரணம் இல்லை அல்லது மரணம் உண்மையானது அல்ல என்பதையும்" மறுக்கவேண்டும் என்பது போல தோன்றுகிறது.

இந்த கருத்தை பவுலும் ஆதரிக்கிறார் - "வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே....மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே

இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். (மாம்சத்திற்குரிய சரீரம் அழிந்துபோகும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். )......... அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்." (1கொரி 15:40-53) ஒருவர் அழியாமையை தரித்துக் கொள்வார் என்றால், அதுவரைக்கும் அவர் அழியாமையைப் பெறவில்லை என்பது தெளிவாகப் பொருள்படுகிறது. அழியாமை மற்றும் சாகாமை கீழ்ப்படிதலுக்கு பரிசாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே ஜனங்கள் அழியாதவர்களாக பிறப்பதில்லை.

**வேதாகமம் உறுதியாக மறுக்கும் மற்றும் சில காரியங்கள்**

"தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது, உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன்." (வெளி 2:24) என்று ஆதிகால சபைக்கு நம்முடைய உயிர்தெழுந்த கிறிஸ்து கூறுகிறார். சாத்தானின் ஆழமான காரியங்களும், போதனைகளும் நமக்கு குறிப்பாக சொல்லப்படவில்லை. ஆகவே நாம் மிக கவனத்தோடு ஊகித்து அவைகளை தவிர்க்கவேண்டும். குறிப்பாக, திருமணம் செய்வதை தடுப்பது, மாம்சம் புசிப்பதை தவிர்ப்பது (1தீமோ 4:1-3) போன்ற பேய்களின் போதனைகள் இதில் அடங்கும். இவைகளை வேதம் போதிப்பதில்லை. கிறிஸ்தவர்கள் அவசியமாக தவிர்க்கவேண்டிய மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து வேதாகமத்தில் உள்ள அநேக போதனைகள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள பத்து பிரமாணங்களில், எட்டு பிரமாணங்கள் செயலாற்றக் கூடியவைகளாகக் காணப்படுகிறது. (யாத் 20:3-7, 13:17) மாம்சத்தின் கிரியைகள் (கலா 5:19-21) பொறாமை, கொலைபாதகம், சம்பாத்தியத்திற்காக போதிப்பது, ஆவிக்குரிய பெருமை(காயீன், பிலேயாம், கோராகு - யூதா 11, 1யோவ 3:12, 11பேதுரு 2:15, வெளி 2:14) இளமைக்குரிய ஆசைகளை விட்டு ஓடுவது (11தீமோ 2:22), "விக்கிரகங்களுக்கு விலகியிருப்பது"... (1யோவ 5:21) இப்படிப்பட்ட செயலாற்றும் போதனைகளைப்பற்றி பின்வரும் நான்கு கட்டுரைகள் விவரிக்கிறது.

மொத்தத்தில், கிறிஸ்தவர்கள் முற்றிலுமாக தவிர்க்கவேண்டிய அறிவு பூர்வமான தவறுகள் மிகக்குறைவு. அதற்குமேல், மற்றவர்களின் தவறுகளைக் காண்பதற்கு நமக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஏனெனில், முதலில் நமக்குள் இருக்கும் ஒவ்வொரு தவறுகளையும் களைந்துபோட வேண்டும்.


## வேதாகமத்தின் போதனைகள்

### அறிவாற்றல் சார்ந்த போதனைகள்

- தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். - எபி 11:6
- இயேசுவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்யவேண்டும் - மத் 10 :32,33, 1யோவ 4:15, 5:5
- இயேசு மாம்சத்தில் வந்தார். - 11யோவ 7, 1யோவ 4:3
- இயேசு கிறிஸ்து (மேசியா, அபிஷேகம் பண்ணப்பட்டவர்) - 1யோவ 2:22, 5:1
- நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல. - கலா 5:4
- உயிர்த்தெழுதல் முடிவடையவில்லை - 11தீமோ 2:16-18
- ஆபிரகாமின் சந்ததிக்குள் பூமியிலுள்ள முழுக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் - ஆதி 12:3, 18:18, 22:16-18, 26:3-4, 28 :14
- தேவனுடைய மற்ற வாக்குறுதிகள் - யாத் 17:16, எண் 14:28-30, 32:10-12 (சங் 95:11) சங் 89:3, 4, சங் 110:4
- "இஸ்ரயேலே, கேள் - நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் "-உபா 6:4

### செயலாற்றும் போதனைகள்

- பாவங்களை அறிக்கையிடுதல் - 1யோவான் 1:8-10
- தேவனில் அன்பு கூறவேண்டும் - 1கொரி 16 :22
- சகோதரர்களை நேசிக்கவேண்டும் - 1யோவ 2:9 -11, 4:20
- நீதியை நடப்பிக்கவேண்டும் - 1யோவ 3:7-11
- " உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு எனக்குப்பின்னே வாருங்கள்." -மத் 10:38, மாற் 8:34, லூக் 9:23
- இயேசுவின் ஆவி உங்களிலும் இருக்கவேண்டும் - ரோம 8:9
- பரிசேயர், சதுசேயரின் நீதியிலும் உங்கள் நீதி அதிகமாகக் காணப்படவேண்டும் - மத் 5:20
- சகோதரர்களிடம் கோபம் கொள்ளவேண்டாம். - மத் 5:22-24, எபே 4:26
- மற்றவர்களை மன்னிக்கவேண்டும் - மத் 6:9-15, 18:27-35
- தன்னைச் சார்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்திச்செய்யவேண்டும். - 1தீமோ 5:8
- பொறாமை, பேராசை, மற்றவர்களிடமிருந்து வல்லமையை தட்டிப்பறிக்கும் குணங்கள் போன்றவைகளை வாழ்க்கையில் நாம் அகற்றவேண்டும். யூதா 11
- அசுத்தத்தையும், வேசித்தனத்தையும், விக்கிரகாரதனையையும் உங்களை விட்டு அகற்றுங்கள் -1கொரி 6-9,10, கலா 5:19 -21
- நாவை அடக்குதல் - யாக் 1:26



பாகம் 2 : தேவைப்படுகிற கிரியைக்குரிய போதனைகள்

# இருதயத்தின் போதனைகள்

*விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.-அப்போஸ்தலர் 4:32*

Rick Evans

இருதயத்தின் போதனைகளை ஒருவர் புரிந்துகொள்வதற்கு, உண்மையான ஜீவனுள்ள ஒரே தேவனைப்பற்றி முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இதை ஒருவர் கற்றுக்கொள்ளத் துவங்கினால் அவரின் தனிப்பட்ட வாழ்க்கை நிச்சயமாக மாறும். "எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவை களைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். " (1கொரி 2:9,10)

இருதயத்தின் போதனைகளைப் பார்க்கும்போது தேவன் அன்பாகவே இருக்கிறார் என்ற அடிப்படையான போதனையை நாம் காணலாம். (1யோவ 4:8,16) அநேகரால் தள்ளப்பட்ட அவருடைய குமாரனாகிய இயேசுவினிடம் இந்த அன்பு காணப்படுகிறது. (1கொரி 16:22) ஒருவர் தேவனுடைய அன்பை அறிந்து கொண்டபின், அவர் நீதியாக இருக்க விரும்புவார் அதாவது இயேசுவின் காலத்தில் சொல்லப்பட்ட பரிசேயர்களுடைய நீதியைக் காட்டிலும் அதிகமான நீதியில் நடக்கவிரும்புவார்கள். (மத் 5:20) இந்த அன்பு விசேஷமாக கோபமாக இருக்கும் நேரத்தில் சுய கட்டுப்பாட்டைக் கொண்டுவரும். (மத் 5:22) இறுதியாக, மற்றவர்கள் எந்த வழியிலும், எப்படிப்பட்ட தவறுகள் செய்தாலும் அவர்களை மன்னிக்கக்கூடிய நிலையே இந்த அன்பின் உச்சக்கட்ட வெளிப்பாடாக இருக்கிறது. (மத் 6:9-15, 18:27-35) தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்ளுவதற்கு முயற்சிக்கும்போது இருதயத்தின் போதனைகள் வளர்ச்சி அடைகிறது.

இருதயத்தின் போதனைகளைப் பொருத்த வரையில் முதலாவது வரவேண்டிய காரியம் அன்பு. 1கொரி 16:22ம் வசனத்தில் "ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், கர்த்தர் வருகிறார்.." என்று வாசிக்கிறோம்.

இப்படிப்பட்ட அன்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டு நம்முடைய ஆண்டவராம் இயேசுவே என்பதை பவுல் தெளிவாக புரிந்துகொண்டார். இதை சார்ந்த பிரபலமான ஒரு வசனத்தையும் நாம் காணலாம். "தேவன் தாம் சிருஷ்டித்த மனுஷனை மிகவும் நேசித்ததால், அவருடைய ஒரே பேரான குமாரனை மனுக்குலத்திற்கு பலியாகக் கொடுக்க அனுமதித்து, மனுக்குலம் மீண்டுமாக உயிர்தெழுந்து ஜீவனோடிருக்க வாய்ப்பளித்தார். அன்பு உண்மையில் எப்படிப்பட்டது என்று இந்த ஒரு செயல் வெளிப்படுத்துகிறது."(யோவ3:16) "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்." (ரோ 5:8, எபே 5:2)

தேவனுடைய அன்பின் சுவிசேஷத்தை போதிப்பதை விட்டுவிட்டு வேறு எதை போதித்தாலும் அது சாபமாகிவிடும் என்று பவுல் அறிந்திருந்தார். "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன், நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் " (கலா 1: 8,9) என்று வாசிக்கிறோம்.

இயேசுவை நேசியாதவர்கள் தேவனுடைய அன்பை புறக்கணித்தவர்களாக இருக்கிறார்கள். 1யோவ 3:16ல் தேவனுடைய அன்பை நாம் காணலாம். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம், நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.." அன்பின் வெளிப்பாடு மிக அவசியமானதால் இயேசு நமக்கு ஒரு கட்டளையாகவே இதை கொடுத்துள்ளார். "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோவ 15:12,13) இயேசு

போதிக்கக்கூடிய இந்த கோட்பாடு, நம்முடைய வாழ்க்கையில் மற்றவர்களை அடையாளம் கண்டு பிடித்துக் கொள்ளும். மேலும், அவர்களை நமக்கு மேலாகவோ அல்லது முன்பாகவோ நிறுத்தச் செய்யும். நம்முடைய இருதயம் அந்த அன்பை ஊக்குவிப்பதால் நம்முடைய கிரியைகள் அதை வெளிப்படுத்தும். "நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான், இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்." (லூ 6:45)

"பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.-" (மத் 6:20,21) என்ற வசனங்கள் நம்முடைய இருதயத்தின் விருப்பம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்று காட்டுகிறது. ஸ்ட்ராங்க்ஸ் -2588 கார்டியா என்ற கிரேக்க வார்த்தை இருதயம் என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. உணர்வுகள் அல்லது சிந்தனைகள் என்பதற்கு அடையாளமாக இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. மாற் 12:30ல் மிக எளிமையாக இயேசு இதை குறிப்பிடுகிறார். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை......"

இப்படிப்பட்ட அன்பை வளர்த்துக் கொள்ள ஒருவர் தேவனுடைய வார்த்தையைப் படிக்கவேண்டும். அதில் தேவனுடைய அன்பின் உண்மையான பொருளை அறிந்துகொள்ளலாம். "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.." (எபி 4:12)

### நாம் பார்பதை அல்ல, நாம் செய்வதே காரியம்

அன்பை புரிந்துகொள்ளுதல், நீதியின்மேல் உள்ள விருப்பத்தை நமக்குள் உண்டுபண்ணும். இயேசுவின் வாழ்க்கை முழுவதிலும் நீதி சிறப்பாக வெளிப்பட்டது. ஆனால் மத் 5:20ம் வசனத்தில் தேவனுடைய நீதி மற்றும் சுயநீதிக்கும் உள்ள வித்தியாசத்தை இயேசு குறிப்பிடுகிறார். "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

பரிசேயர்கள் தேடின நீதியைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். "தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்து சாட்சி சொல்லுகிறேன், ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத்தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்." (ரோம10:2,3) மற்றொரு கடிதத்தில் -"..அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்." (பிலி 3:8,9) என்று தெளிவாக விளக்குகிறார்.

இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் தேவனுடைய நீதி வளர்ச்சி அடையும் என்பதை பவுல் விவரிக்கிறார். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. " (ரோம 1:17)

விசுவாசத்தை செயலாற்றுவதினால் நாம் தேவனுடைய நீதியைப் புரிந்துகொண்டு நம்முடைய வாழ்க்கையில் அதை அப்பியாசப்படுத்தலாம். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்." (ரோம 10:10)

### கோபத்தை தேக்கி வைக்காமல் மன்னிக்க வேண்டும்

ஒருவர் தேவனுடைய அன்பை புரிந்துகொண்டால், அவர் தனக்குள் சுய கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று உணர்ந்து கொள்வார். கோபத்தை கட்டுப்படுத்துவதின் முக்கியத்துவத்தை

இயேசு காட்டினார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்..." (மத்

5:22) மேலும் புவல் இதை உறுதிப்படுத்துகிறார். "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்.." (எபே 4:26) நாம் அனைவரும் கோபமுள்ளவர்கள் என்று பவுல் அறிந்திருந்தார். ஆனால் நம்முடைய பாவத்திற்கு வழிநடத்தும்படிக்கு நாம் கோபத்தின் குடியிருப்பாக மாறிவிடக்கூடாது என்று நமக்கு புத்திசொல்லுகிறார். மன்னிப்பதன் மூலம் கோபத்தைக் கட்டுப்படுத்தலாம் என்று அவர் அறிந்திருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியரில் உள்ள சகோதரர்களுக்கு அன்பாகவும், கனிவாகவும் எச்சரித்தது போல அனைவரையும் எச்சரிக்கிறார். "நாங்கள் யோக்கியர்க ளென்று விளங்கும்படி உங்களிடத்தில் பேசுகிறோமென்று எண்ணுகிறீர்களோ? தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம். பிரியமானவர்களே, சகலத்தையும் உங்கள் பக்திவிருத்திக்காகச் செய்கிறோம். (11கொரி 12:19) கோபம் அழிக்கக் கூடியதாக இருக்கலாம், அது ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருக்கும் அன்பையும் மூடிவிடும். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் நம்முடைய சுய கட்டுப்பாட்டைக் காட்டவேண்டும்.

கூடுதலாக, மன்னிப்பு மிக அவசியம் என்று இயேசு கூறுகிறார். மத் 6:9-15ம் வசனங்கள் ஆண்டவர் கற்பித்த ஜெபத்தில் மன்னிப்பின் கோட்பாடு விவரிக்கப்படுகிறது. மற்றும் மத் 18 : 23 - 35 ம் வசனங்களில் இதை செயலாற்றும் முறையை - இரக்கமற்ற ஊழியக்காரன் என்ற உவமையில் எடுத்து காட்டப்பட்டுள்ளது. மத் 18:32,32ம் வசனங்களில் அந்த ஊழியக்காரன் தனக்கு கொடுக்கப்பட்ட மன்னிப்பிலிருந்து எந்த பாடமும் கற்றுக் கொள்ளவில்லை. "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." (மத் 18:35)

மன்னிப்பு இருதயத்திலிருந்து வரவேண்டும். "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள், அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து - நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார்." (லூ17:3,4) "அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து - ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும் ? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு - ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்." (மத் 18:21,22)

மன்னிப்பு கொடுப்பவர்களுக்கு நீடிய பொறுமை தேவை என்று இயேசு கற்பித்தார். மன்னிக்கப்பட்டவர் இனி மாறுவதற்கு வாய்ப்பில்லை என்று அவர் காட்டினார். அவர் மீண்டுமாக கோபமூட்டப்பட்டால், மிக அன்போடும் கனிவோடும் எச்சரிக்கப்பட்டு, மன்னிக்கப்படவேண்டும். மன்னிக்கக்கூடிய ஒரு எடுத்துகாட்டின் மூலம் ஒரு தனிப்பட்டவருக்குள் மாற்றங்கள் ஏற்படுவதற்கு இயேசு காட்டினார். நாம் தேவனுடைய அன்பைப் புரிந்துகொண்டால், தேவனுடைய நீதியை நமக்குள் வளர்ச்சி அடையசெய்யும் அப்போது நாம் நீதியின் நிமித்தம் எதிர்க்கப்படும்போது சுய கட்டுப்பாட்டை வெளிப்படுத்தமுடியும். அதற்குபின் மற்றவர்களை மன்னிப்பதன்மூலம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதை நாம் கற்றுக்கொள்ளலாம். இதற்கு ஸ்தேவான் நமக்கு ஒரு நல்ல எடுத்துகாட்டு. "அவனோ, முழங்காற்படியிட்டு - ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்." (அப் 7:60)

நாம் தேவனுக்கு விரோதமானக் காரியங்கள் செய்தால், மனந்திரும்பி அவரிடம் கட்டாயமாக மன்னிப்பு க்கேட்கவேண்டும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1யோவ 1:9) தேவனுக்கு இசைவில்லாத காரியங்களை நாம் செய்தால், நாம் ஜெபத்தில் தரித்திருந்து, அவரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

ஆலயம் பிரதிஷ்டையின் போது அவர் இஸ்ரயேலை ஆசீர்வதிக்கையில், பாவத்தை உணர்ந்து அதிலிருந்து மனந்திரும்பி மன்னிப்பைக் கேட்கவேண்டும் என்ற முக்கியத்துவத்தை இராஜாவாகிய சாலொமோன் எடுத்துக்காட்டினார். இப்படியாக மன்னிக்கப்பட்டால், நீதியை கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு வாய்ப்புகள் ஏற்படுகிறதையும் அவர் காட்டினார். "அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால் வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும்போது, அவர்கள் இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ்செய்து, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, தங்களை தேவரீர் கிலேசப்படுத்துகையில் தங்கள் பாவங்களைவிட்டுத் திரும்பினால். பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரயேலும் செய்த

பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உமது தேசத்தில் மழைபெய்யக் கட்டளையிடுவீராக. தேசத்திலே பஞ்சம் உண்டாகிறபோதும், கொள்ளைநோய் உண்டாகிறபோதும், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி உண்டாகிறபோதும், அவர்கள் சத்துருக்கள் தேசத்திலுள்ள பட்டணங்களை முற்றிகை போடுகிறபோதும், யாதொரு வாதையாகிலும் யாதொரு வியாதியாகிலும் வருகிறபோதும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரயேல் அனைவரிலும் எந்த மனுஷனானாலும் தன் இருதயத்தின் வாதையை உணர்ந்து, இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும், உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து, தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்படும்படிக்கு தேவரீர் ஒருவரே எல்லா மனுபுத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய வழிகளுக்கத்தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக...." (1இராஜ 8:35-40)

இஸ்ரயேல் தங்களுடைய பாவங்களை உணர்ந்து தங்களுடைய இருதயத்தை மாற்றினது போல நாமும் நம்முடைய பாவங்களை உணரவேண்டும். இதுவே தேவனுடைய சித்தத்தை நம்முடைய வாழ்க்கையில் செய்ய கற்றுக் கொள்வதாகும். "பின்பு, அவர் எல்லாரையும் நோக்கி - ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்." (லூ 9:23) என்று இயேசு விவரிக்கிறார்.

**சுருக்கம்**

வேதத்திற்கு தேவைப்படுகிற செயலாற்றும் போதனைகள் :

* "ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.."(1கொரி 16:22)


* "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்." (லூக் 14:27)

* "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத் 5:20)

*" நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்." (மத் 5:22)

*"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத் 6:15)

இருதயத்தின் போதனைகள் அன்பை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படுகிறது. அன்பை பின்தொடர்வதன் மூலம் நாம் தேவனுடைய நீதியை கற்றுக்கொண்டு விசுவாசத்திலும், அவருடைய குணங்களிலும் வளர்ந்து, இயேசு காட்டிய மாதிரியில் நித்தமும் பின்பற்றலாம். அதற்குபின் நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் அவரைப் பின்பற்றவேண்டும். கோபமாக இருக்கும்போது நாம் எவ்வாறு சுய கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதையும் இயேசுவின் மாதிரி நமக்கு காட்டுகிறது. இங்குதான் நாம் மற்றவர்களை மன்னிக்க கற்றுக் கொள்ளுகிறோம். நல்ல குணங்களை நாம் நமக்குள் வளர்த்துக் கொள்ளும்போது இருதயத்தின் மற்ற போதனைகளையும் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற அவசியத்தை நாம் புரிந்துகொள்ளலாம். தேவனைப்பற்றி ஆழமான காரியங்களை நாம் புரிந்துகொள்ள நாம் கற்றுக் கொண்ட பாடங்களும், அனுபவங்களும் வழிவகுக்கும். "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா, உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக. (நீதி 23:26)



பாகம் 2 : எல்லா மனிதர்களின் பார்வையிலும் கனத்திற்குரிய காரியங்கள்

# தன்னை சார்ந்தவர்களுக்கான எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்தல் . . .

Robin Rice

ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் - 1தீமோ 5:8

தன்னுடைய வீட்டாரின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத கிறிஸ்தவர்களைப் பற்றிய ஒரு அதிருப்தியான வாசக பகுதியை வாசிப்பதற்கு நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. நம்முடைய கவனத்திற்காகவே இந்த வார்த்தைகள் நமக்கு கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு எதிராக செயல்படுவர்கள் நிச்சயமாக குற்றவாளி ஆவர். உண்மையில், பவுல் பயன்படுத்தின மொழியின் அழுத்தத்தின் அடிப்படையில் பார்க்கும்போது கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு மிக முக்கியமான உபதேசமாக இருக்கிறது.

கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான எந்த உபதேசங்களும், புரிந்துகொள்வதற்கு எளிமையாக ஆராய்ந்து, தெளிவாக அறிந்து கொண்டு, அவைகளை நடைமுறைபடுத்தவேண்டும் என்று ஒருவர் எதிர்ப்பார்க்கவேண்டும். இந்த காரியத்திலும் இப்படியாகவே இருக்கிறது. இந்த வேத பகுதியில் சொல்லப்பட்ட முக்கிய பொருள் என்னவெனில், கிறிஸ்துவ விசுவாசிகளுக்கு சிலபொறுப்புகள் இருப்பதாக குறிப்பிடுகிறது. மேலும், அந்த நபரை சார்ந்திருக்கும் அனைவரின் அடிப்படை தேவைகள் அதாவது உணவு, உடை இருப்பிடம் போன்றவைகளை கொடுக்க வேண்டிய கடமைகள் உள்ளதாகவும் கூறுகிறது. இந்த வசனம் சிறுபிள்ளைகளுக்கு மட்டுமல்ல, நம்முடைய வயது சென்ற பெற்றொர், முதியவர்களுக்கும் பொருந்தும்.

1தீமோ 5:3-10 உள்ள வசனங்களை வாசிக்கும்போது, நாம் பார்த்துகொண்டிருக்கும் வசனம் தற்காலிகமான காரியங்களைக் குறித்தும், சபையில் உள்ள கைம்பெண்களுக்கான பராமரிப்பைப்பற்றியும் கூறப்படுகிறது. ஏனெனில், பிள்ளைகள், பேரபிள்ளைகள் இருக்கக்கூடிய விதவைகளைப் பராமரிக்க, உறவினர்கள் இருப்பதால், இந்த பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் தனித்திருக்கும் விதவைகளை பிரித்துக் காட்டுகிறார். அவர்களை "கனப்படுத்தி" அவர்களுக்கு தேவையான காரியங்களை சபை சந்திக்கவேண்டும் என்று பவுல் கூறுகிறார்.(3,5 வசனங்கள்) விதவைகளின் பேரபிள்ளைகள் மற்றும் பெரிய பிள்ளைகளைப் பொருத்த வரையில் (வசனம் -4) "இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக்கற்றுக்கொள்ளக்கடவர்கள், அது நன்மையும் தேவனுக்கு முன்பாக பிரியமுமாயிருக்கிறது.." என்றும் 7ம் வசனத்தில் "அவர்கள் குற்றஞ்சாட்டப்படாத வர்களாயிருக்கும்படி இவைகளைக் கட்டளையிடு." என்ற எச்சரிப்பான ஆலோசனையை வலுவாக கட்டளையிடுகிறார். இந்த கட்டளை கடைபிடிக்காத பட்சத்தில் அதன் நிலை என்னவென்பதை 8ம் வசனம் கூறுகிறது.

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் ( குடும்பம், பெற்றோர் அல்லது முதியவர்கள்) விசேஷமாகத் தன் வீட்டரையும் (மனைவி, குழந்தைகள் ,வேலைக்காரர்கள்) விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." அப்போஸ்தலனாகிய பவுல் விதவைகளின் பராமரிப்பைப்பற்றி விசேஷமாக குறிப்பிட்டிருந்தாலும் 8ம் வசனத்தில் வீட்டார் யாவரையும், அதவாது அந்த நபரை சார்ந்திருக்கும் அனைவரும் பராமரிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகிறார். ஆகவே 1தீமோ 5:3-10 வசனங்களில் தற்காலிகமான உலகத்தின் தேவைகளை குறித்து பவுல் குறிப்பிடுகிறார்.

அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்களுடைய அனைத்தையும் தேவனுக்காகவும் அவருடைய ஊழியத்திற்காகவும் ஒப்புக் கொடுத்திருப்பதினால் இவர்கள் தங்களுடைய பொறுப்புகளையும், கடமைகளையும் ஒதுக்கிவைப்பது தவறில்லை என்று அநேகர் நினைத்து கொள்கிறார்கள். ஆகவே அவர்களின் குடும்ப பொறுப்புகளையும் மற்ற தேவைகளையும் எளிதாக ஒதுக்கிவிடுகிறார்கள்.

பொறுப்புகளை தட்டிக்கழிப்பதைக் குறித்து, மாற் 7:9-13ம் வசனங்களில் ஒரு எடுத்துக்காட்டை வாசிக்கிறோம். பரிசேயர்கள் தங்களுடைய பெற்றோரை பராமரிப்பதற்கு பதிலாக காணிக்கை கொடுத்துவிட்டேன் என்று எளிதாக பொறுப்புகளை ஒதுக்கினார்கள். அதற்கு "உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத் 20:12) என்ற கற்பனையை மிகத் தெளிவாக இயேசு பதில் அளித்தார். இப்படியாக பரிசேயரில் சிலர் தங்களுடைய குடும்பத்தாரின் பொறுப்புகளை தட்டிக்கழித்தார்கள். ஆகவே நம்முடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட வஞ்சனைகள் நடக்காதபடிக்கு மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தேவனுடைய ஊழியத்தில் நம்முடைய குடும்பத்தாரின் ஊழியமும் அடங்கியுள்ளது.

இன்றைய உலகத்தின் அநேக அரசாங்க பொருளாதார அமைப்புகள், அரசாங்க அமைப்புகள் மற்றும் அரசியலும் வளர்ந்து கொண்டிருக்கும் ஜனத்தொகைக்கும் போதுமான அளவுக்கு தேவையான பொருளாதாரத்தையும், உடல் நல உதவிகளையும் கொடுத்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் உதவிகரமாக இருப்பினும், பெற்றோர்களையும் முதியவர்களையும் பராமரிக்கக்கூடிய பொறுப்புகளிலிருந்து பிள்ளைகள் முழுமையாக விடுவிக்கப்படுவதில்லை.

நம்முடைய பரலோக தந்தையும் அவருடைய குமாரனாகிய இயேசுவும் தங்களை சார்ந்திருப்போரை அன்பாக பராமரித்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டிருப்பதே, நமக்கு மிகச் சிறந்த எடுத்துகாட்டாக இருக்கிறது. ஆதியாகமத்தில் சிருஷ்டிப்பின் காரியங்களைக் குறித்து நாம் வாசிக்கும் போது, நம்முடைய முதல் பெற்றோருக்காக தேவன் ஆயத்தம் செய்த அருமையான இந்த பூமியையும், அதில் ஏற்பாடு செய்யப்பட்ட சூரிய வெளிச்சம், உணவு, குடியிருப்பு போன்ற காரியங்களில் அவருடைய பராமரிப்பையும் அன்பையும் வெளிப்படுத்துகிறது. (ஆதி 1, 2, சங் 104) இஸ்ரயேல் ஜனங்கள் வனாந்தரத்தில் நாற்பதாண்டுகள் அலைந்தபோது, அவர்கள் உயிர்வாழ்வதற்கு மன்னாவையும் பழுதாகாத உடைகளும், பாதரட்சைகளையும், விசேஷித்தவிதமாக தேவன் அவர்களுக்குக் கொடுத்து அவர்களைப் பராமரித்தார். (யாத் 16:35, யோசு 5:12, உபா 29:5) திரளான கூட்டம் இயேசுவை நீண்ட நேரம் பின்பற்றினபோது, அவர்கள் அனைவரும் பசியின் உச்சக்கட்டத்தை அடைந்தார்கள். அப்பொழுது இயேசுவை நம்பி வந்தோரின் தேவையை பூர்த்தி செய்யவேண்டிய நிலை வந்தபோது, அவர்கள் மேல், அவர் மனதுருகி அனைவருக்கும் ஆகாரம் கொடுத்தார். (மத் 15:32,38) இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்ட காட்சியின் அடையாளம் - மகிமை அடைந்த இயேசு ஏழு பொன் குத்துவிளக்குகளுக்கு மத்தியில் உலாவி கொண்டிருப்பதை யோவான் கண்டார். ஏழு சபைகள் உள்ள காலங்களைக் கொண்ட முழு சுவிசேஷயுகம் இயேசுவின் கண்காணிப்பிலும், பராமரிப்பிலும், இருப்பதை இந்த காட்சி காட்டுகிறது. (வெளி 1:12,13)

இறுதியாக, இயேசுவின் மரண வேதனையிலும், தன்னுடைய தாயாகிய மரியாளைப்பற்றி கவலைப்பட்டவராக, அவர்களுக்கு வேண்டிய ஆயத்தத்தைச் செய்தார்." இதோ, உன் தாய்... " என்று யோவானிடம் மரியாளை ஒப்படைத்து - 1தீமோ 5-4,8 வசனங்களில் குறிப்பிடப்பட்ட உபதேசங்களுக்கு சரியான எடுத்துக்காட்டை செயல்முறைப்படுத்தினார். அதற்குப்பின் யோவான் இயேசுவின் தாயாகிய மரியாளை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு அவளை பராமரித்தார்.(யோவ 19:26,27)


உபா 8:3ம் வசனத்தைக் குறிப்பிட்டு இயேசு பேசினார். "அவர் பிரதியுத்தரமாக - மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்." (மத் 4:4) ஆகவே சார்ந்திருப்போரின் தற்காலிகமான தேவைகளையும், ஆவிக்குரிய தேவைகளையும் விசேஷமாக, சிறு பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற சரியான சத்தியத்தை வேதம் போதிக்கிறது. நாம் பரலோகப் பிதாவின் அப்பத்தினால் போஷிக்கப்படுகையில் அற்புதமான ஜீவனுக்குரிய வார்த்தைகளுக்காக நம்மிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் நாம் கட்டாயம் கொடுக்கவேண்டும். இந்த உலகத்திலிருந்தும், உலகத்தின் சிந்தையிலிருந்தும் நாம் சிறு பிள்ளைகளைக் காத்துக்கொள்ள

வேண்டும். கதைகள், போதனைகள், வேதாகமத்தின் எடுத்து காட்டுகள், தெய்வீக கோட்பாடுகள் போன்ற ஆவிக்குரிய கிரியைகளைக் கற்றுக்கொடுத்து சரியான ஆவிக்குரிய பாதுகாப்பைக் கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறோம்.

இப்படிப்பட்ட ஆவிக்குரிய காரியங்களை சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கையில், இந்த ஜீவனத்திற்குத் தேவையான அடிப்படைக் காரியங்களையும் கொடுக்கவேண்டும். ஏனெனில், இதை தவிர்த்தால், மற்றவர்கள் மேல் அல்லது சமுதாயம் பாரத்தை சுமக்க நேரிடும். பாஸ்டர் ரசல் கூறும்போது, - "இந்த உலகத்தில் நீங்கள் உங்கள் குழந்தைகளைக் கொண்டு வந்திருந்தீர்களானால் அவர்கள் நிமித்தமாக நீங்கள் தேவனிடத்தில் கணக்கு கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறீர்கள். இவர்களுக்கு நீங்கள் ஆன்மீக கட்டளைகள் மட்டும் அல்லாமல் தேவையான படிப்பு, வணிகம், வாழ்க்கையில் குடியமைப்பதற்கு தேவையான அனைத்தையும் செய்யவேண்டும். இவைகளை நீங்கள் செய்ய தவறினால் நீங்கள் இவர்களைப் பெற்றெடுத்திருக்கக்கூடாது. அவர்களை நீங்கள் பெற்றெடுத்ததினால், உங்கள் நேரங்கள், செல்வாக்குகள் மற்றும் உங்களால் முடிந்த அனைத்திற்கும் முதல் உரிமை அவர்களுக்கே உரியதாக இருக்க வேண்டும். இப்படிச் செய்வீர்களானால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட முதல் இடத்தை சுவிசேஷம் (சத்தியத்தை மற்றவர்களுக்கு அறிவித்தல்) கூடபெறுவதில்லை. (Reprints, 2021)

"நம்முடைய வீட்டாரின்" தேவைகளைப் பூர்த்தி செய்வது என்ற பாடத்தில் - கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதரர்களுக்குத் தேவையான சகல ஆவிக்குரிய உதவிகளையும் சரியாகக் கொடுக்கவேண்டும் என்று நம்முடைய "விசுவாச வீட்டாரைப்" பற்றி சொல்லப்படுகிறது. கலா 6:10ல் பவுல் நமக்கு கட்டளையிடுகிறபடி நம்முடைய மூத்த சகோதரர்கள், நம்முடைய சகோதர, சகோதரிகள் மற்றும் நம்முடைய ஆவிக்குரிய குழந்தைகள் அனைவருக்கும் நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும். பவுல் தாமே பூமிக்குரிய குடும்பத்திலிருந்து தன்னை விலக்கிக் கொண்டாலும், ஆவிக்குரிய குடும்பங்களுக்குத் தேவையான ஆவிக்குரிய உணவைக் கொடுக்க வேண்டும் என்ற கோட்பாட்டை தன்னுடைய இருதயத்தில் பதித்து வைத்திருந்தார். "இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன், நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை, நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன், பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டும். ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்." (11கொரி 12:14,15)

தங்களுடைய பிள்ளைகளுக்குத் தேவையான உணவு, இருப்பிடம் மற்றும் உடைகள் - இதைத் தவிர இந்த உலகம் தரக்கூடிய அறிவாற்றல், செயலாற்றல், கல்வி, மற்றும் வேறு படிப்பினைகள் போன்ற காரியங்கள் எந்த அளவிற்குப் பெறவேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுடையது. நாம் அதிகமான காரியங்களை அவர்களிடம் திணிக்காமல், தேவைக்கேற்றவைகளை மட்டுமே கொடுக்கவேண்டும். (பிலி 4:5) மேலும், மனதில் நல்ல ஆவியோடு அறிவுள்ள சிந்தையை செயல் படுத்தினால் குடும்பத்தில் மகிழ்ச்சியும், நன்மைகளையும் சுதந்தரித்துக் கொள்ளலாம். (1தீமோ 1:7) நம்முடைய குடும்பத்தினருக்கு அதிகப்படியாக தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்கு, வேண்டிய பணத்தை விட அதிகமான நேரம் தேவைப்படலாம். நம்முடைய சுயநலத்திற்காக (மாம்சம்) மட்டுமே நாம் நன்மையை தரக்கூடிய காரியங்களைச் செய்து கொண்டிருப்பதில்லை என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அதேபோல் தன்னுடைய குடும்பம் மிக சுபிக்ஷமாக இருக்கவேண்டும் என்று எண்ணங்கொண்ட லோத்து, மிகச் செழிப்பான இடமாகிய சோதோமில் தன்னுடைய கூடாரத்தை அமைத்து, இறுதியில் அனைத்தையும் இழந்துவிட்டார் ! (ஆதி 19)



பாகம் 2 : சிந்தையையும் பாவத்தையும் அகற்று

# தலையிலும், கைகளிலும் உள்ள பாவங்களை களைந்துபோடுதல்

Dan Wesol

*அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா ? வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை - 1கொரி 6 :9,10*

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன - விபசாரம், வேசித்தனம், அசுத்தம் காமவிகாரம், விக்கிரகாராதனை பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே, இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் - கலா 5:19-21

தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாத பத்து தனிப்பட்ட துன்மார்க்கர்களை- 1கொரி 6:9,10ம் வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் வரிசைப்படுத்துகிறார். ஏனெனில், சில சகோதரர்கள் முற்காலத்தில் இப்படிப்பட்ட பழக்க வழக்கத்தில் இருந்து, கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், தேவ ஆவியினாலும் நீதிமான்களாக்கப் பட்டிருந்தார்கள். (1கொரி 6:11) இத்தகையான பாவங்கள் கொரிந்து பட்டணத்து சகோதரர் சகோதிரிகள் மத்தியில் காணப்பட்டிருக்கக்கூடாது.

கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில், நம்முடைய விழுந்துபோன அபூரணமான மாம்சத்தின் பதினைந்து வகையான கிரியைகளை அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் (கலா 5:19-21) இப்படிப்பட்ட பழக்க வழக்கங்கள் இருக்கக்கூடியவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று பவுல் கூறுகிறார். ஆங்கிலத்தில் "பிராக்டிஸ்" என்ற வார்த்தை பிராக்டிஸோ என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. **(ஸ்டிராங்க்ஸ் - 4238, பிராஸோ) இவ்வார்த்தைக்கு** "தொடர்ந்து செய்வது" அல்லது "பழக்கத்தில் உள்ள" என்று பொருள்படும். பாவத்தின் சிந்தனையை கிரியைகளின் மூலம் வெளிப்படுத்துவதாகும். இது ஒரு தற்செயலாக நடக்கும் தவறல்ல. மனதில் பாவம் கருத்தரிக்கப்பட்டு, அந்த அநீதியான திட்டம் அனுதினமும், அல்லது ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை அல்லது வெவ்வேறு விதிமுறைகளின்கீழ் பழக்கமாகவும் தொடர்ந்து கிரியை செய்கிறது.

அப்போஸ்தலனாகிய யூதா தங்களுடைய சுயவிருப்பதை நிறைவேற்றுவதற்காக அநீதியான திட்டங்களை செயல்படுத்தின காயீன், பிலேயாம் மற்றும் கோராகு என்ற மூன்று தனி நபர்களைக் குறித்து பேசுகிறார். (யூதா 11) தேவன் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக காயீன் தேவனுடைய வழியில் செல்லாமல், தன்னுடைய வழியில் சென்றான். தேவனுடைய அங்கீகரிப்பைப் பெறுவதற்கு தன்னுடைய சகோதரன் ஒரு தடையாக இருப்பதாக காயீன் எண்ணினான். அவ்வாறாக சிந்திக்கவேண்டாம் என்று தேவன் அவனை எச்சரித்தும், தான் செய்யக்கூடிய காரியம் தவறு என்று அறிந்திருந்தும், தன்னுடைய சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக முறுமுறுத்தான். இஸ்ரயேலர்கள் அந்நிய பெண்களைச் சேர்த்துக்கொள்வது தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானது என்று பிலேயாம் அறிந்திருந்தும், அதிகமான பொக்கிஷங்களையும் வெகுமதிகளையும் பெறவேண்டும் என்று வாஞ்சித்தான். இஸ்ரயேலில் ஆண்களை பாவம் செய்வதற்கு தூண்டிவிட்டு, அவர்கள் தேவனிடம் தண்டனை பெறுவதற்கு மோவாப் தேசத்து ராஜாவாகிய பாலாகிடம் ஆலோசனை கூறினார். கோராகு மிகுதியான வல்லமையை வாஞ்சித்ததினால், தேவனால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மேற்கொள்ள முயற்சித்தான்.

தங்களுடைய செயல், தேவனால் அங்கீகரிக்கப் பட்ட ஆபேல், இஸ்ரயேல் ஜனங்கள், மோசே மற்றும் ஆரோன் என்பவர்களுக்கு விரோதமானது என்று இவர்கள் ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள். தேவனை எதிர்த்து அந்த மூவரும் துணிகரமாக தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். அவர்களின் துன்மார்க்கமான திட்டங்களைச் **செயல்படுத்தின கிரியைகளுக்குத்தக்கப் பலனையும்** அடைந்தார்கள். இந்த செயல்முறையை யாக்கோபு விவரிக்கிறார். "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்." (யாக் 1:14,15)

கிறிஸ்துவை பின்பற்றக்கூடியவர்களுக்கு வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள இந்த மூன்று பாடங்களும், எப்படி இருக்கக்கூடாது என்றும், எதை பேசக்கூடாது என்றும், எதை செய்யக்கூடாது என்றும் போதிக்கிறது. தேவ ஆவியினால், ஊக்குவிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் தலையில் (சிந்தை) மற்றும் கைகளில் (கிரியை) உள்ள பாவங்களைக் குறித்தும், அவைகளில் சிக்கிக்கொண்டு, அவைகளுக்கு அடிமைப்படுவதற்கு முன் அவைகளை களைந்து போடுவதற்கும் தேவையான எச்சரிப்புக்களை துவக்கத்திலேயே கொடுத்திருக் கிறார்கள்.

**உங்கள் சிந்தையை தேவ ஆவியினால் நிலைவரப்படுத்துங்கள்.**

உங்கள் சிந்தையை விழுந்துபோன மாம்சத்தில் அல்ல தேவ ஆவியின் மேல் நிலைவரப்படுத்துங்கள் (ரோ 8 :5,6)

கலாத்தியருக்கு பவுல் எழுதின நிருபத்தில், விழுந்துபோன மாம்ச கிரியைகளை செய்யாதிருப்பதற்கு ஒரு பாதுகாப்பான எச்சரிப்பைக் கொடுத்தார். "பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்." (கலா 5:16) என்று பவுல் கூறுகிறார். "நடப்பது" என்ற வார்த்தை தொடர்ந்து செய்யும் கிரியைகள் அதாவது அடுத்தடுத்து வைக்கும் அடிகளில் ஒருவர் முன்னேறி செல்வதைக் குறிக்கும்

ஆவியின்படி நடக்கும்போது, தொடர்ச்சியாக அல்லது வழக்கமாக -பலி, நீதி, அன்பு மற்றும் தெய்வீகத்துவத்தை நம்முடைய வாழ்க்கையில் காத்துக் கொள்ளலாம். இந்த குறுகிய பாதையில் நம்முடைய அடிச்சுவடுகளைக் கவனித்து பின்பற்றக்கூடியவர்களும் உண்டு என்பதை நினைவில் கொள்ளவேண்டும். (மத் 7:14) இவ்வழியைப்பற்றி இயேசு கூறுகையில் - "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத் 5:16)

மாம்சத்தின் கிரியைகளுக்கு எதிரான சில ஆவிக்குரிய நன்மையான கிரியைகள் சிலவற்றை கீழே காணலாம் -

* சிந்தையிலும், கிரியையிலும் பரிசுத்தம். -"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது. ......." (யாக் 3:17,18)

* தேவனிடத்தில் செய்த உடன்படிக்கைக்கும் திருமண ஒப்பந்தத்திற்கும் தேவனுக்குள் விசுவாசமுள்ளவராக இருக்கவேண்டும். (ரோம 12:1,2, 1கொரி 7:10,11)

* தேவன் பேரில் வைக்கும் விசுவாசமும் நம்பிக்கையும். (11கொரி 1:9)

* தாராளமாக பகிர்ந்துகொண்டு, ஏழைகளுக்கு இறங்கவேண்டும். (1தீமோ 6:18, மத் 6:2-4)

* கிரியைகளிலும், வார்த்தைகளிலும் உண்மை (கோலோ 3:9,10)

* அன்பு, இரக்கம், மனத்தாழ்மை, கனிவு மற்றும் பொறுமை நிறைந்த இருதயத்தை தரித்துக் கொள்வது (கொலோ 3:12)

* ஒருவரையொருவர் தாங்கி, ஒருவரையொருவர் மன்னிப்பது. (கொலோ 3:13)

* ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, பகைவரையும் நேசிக்கவேண்டும். (யோவா 13:34, லூ 6:27)

* கிறிஸ்துவின் சமாதானத்தை உங்கள் இருதயத்தை ஆள அனுமதிப்பது. (கொலோ 3:15)

* நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். (கொலோ 3:15)

* கிறிஸ்துவின் வார்த்தைகள் உங்கள் இருதயத்தில் அதிகமாக இருப்பதால் சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும். (கொலோ 3:16)

* சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்ளுதல் (மத் 28:19,20)

**ஆவிக்குரிய வாழ்க்கையை வாழக்கூடிய வழிகள்**

தலையில் (சிந்தை) உள்ள பாவங்கள், கைகளினால் (கிரியை) செயல்படுத்துவதற்கு முன் அவைகளை களைவதற்கு நாம் எப்படிப்பட்ட ஆவிக்குரிய பழக்கங்களைப் பழகவேண்டும் ?

காலையில் எழும்போது, ஒரு கிறிஸ்தவனுடைய சிந்தை தேவனை நோக்கி இருக்கவேண்டும். நன்றியறிதலான ஒரு ஜெபத்தை சத்தமாகவோ, மௌனமாகவோ நாம் ஏறெடுக்கலாம். -" இந்த இரா முழுவதும் என்னைக் காத்து இந்த புதிய காலையில் எழுந்திருக்க செய்ததற்காக நன்றி...."

தனிப்பட்ட முறையில் காலை தீர்மாணங்களை எடுக்கலாம். "இந்த நாள் முழுவதிலும் தேவன்மேல் நம்பிக்கை வைத்து அவருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய நீதியின் கோட்பாடுகளை உண்மையும், பரிசுத்தமுமாகக் காத்துக் கொள்ள முயற்சிப்பேன். இதற்கு எதிராகவரும் சுயநலமான சிந்தைகளைக் களைந்துபோடுவேன். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பிரதிநிதியாக தேவனுடைய அன்பைப் பிரதிபலித்து, அவைகளைக் குறித்துப் பேசுவேன். ஜெபத்தை பழக்கமாக எற்படுத்துவேன்."

அந்த நாளுக்காக நம்முடைய சிந்தையை ஆயத்தப்படுத்தியபின், வீட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன் வசனங்களை வாசித்து, அனுதின மன்னாவை உண்டு, அந்த நாளில் தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபிக்க வேண்டும். வழியில் நீங்கள் வேலைக்கு செல்லும் போது வானொலியை கேட்க அல்லது நாளிதழ்களை வாசிக்கவோ, கேட்கவோ , தொலைகாட்சிகளை பார்க்கவோ சூழ்நிலைகள் ஏற்பட்டால் தேவன் மேல் நீங்கள் வைத்த விசுவாசம் மற்றும் இயேசுவை பின்பற்றுவதற்காக நீங்கள் பெற்ற சிறப்புரிமைக்கும், குறுகலான வழியில் பலியின் ஜீவியத்தில் வாழ்ந்து, நீதியை விரும்பி, அநீதியை வெறுக்கக்கூடிய காரியங்களுக்கு இசைவாக உள்ளதா என்று யோசித்து செயல்படுங்கள். (மத் 7:14, மத் 1:9) நீங்கள் பார்க்கக்கூடிய காரியங்களைக் குறித்து ஓ,

சிறிய கண்களே, நீங்கள் பார்க்கும் காட்சியைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள், சிறிய காதுகளே, நீங்கள் கேட்கக்கூடிய செய்திகளைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள், சிறிய கரங்களே நீங்கள் செய்வதைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். சிறிய கால்களே நீங்கள் போகும் இடத்தைக் குறித்து எச்சரிக்கயைாக இருங்கள். சிறிய வாயே நீங்கள் பேசக்கூடிய காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்" என்று "Be careful little eyes what you see" என்ற கவிதை மிக எளிமையாக இந்த கருத்தை விவரிக்கிறது.

அடிக்கடி ஜெபியுங்கள், தேவனுடைய பராமரிப்புக்காக நாள் முழுவதிலும் காத்திருங்கள். மற்றவர்களோடு தொடர்பு கொள்கையில், ஆண்டவரின் வார்த்தைகள் நம்முடைய சிந்தையையும், வார்த்தைகளையும் நடத்தையையும் வழிடத்த அனுமதியுங்கள். "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." (லூ 6:31) "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை." (மத் 6:1) வீட்டிற்குத் திரும்பும்போது வேதத்தை வாசியுங்கள்,தலைப்பு கட்டுரைகளையும் மற்றும் பொதுவான வேத படிப்புகளுக்குத் துணையாக இருக்கும் வேத தொகுப்புகளையும் வாசியுங்கள். குடும்பமாகவும் ஜெபியுங்கள், தனி ஜெபங்களையும் ஏறெடுங்கள் வசனங்களை தியானிக்க நேரம் செலவழியுங்கள். நீங்கள் வாசித்தத்தில் உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட சிறிய பொக்கிஷமான சத்தியங்களை உங்கள் துணைவியாரிடமும், குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். அருகில் உள்ள சகோதரர்களிடமும் தூரத்தில் உள்ள சகோதரர்களிடமும் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள். ஆவிக்குரிய அனுபவங்களில் தளர்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஊக்கமளியுங்கள். நோய் உள்ளோரை சந்தியுங்கள், தனித்திருப்பவர்களுக்கு ஆறுதல் அளியுங்கள். இப்படிப்பட்டவர்களை அலைபேசியின் மூலமாகவும், இணையதளத்தின் மூலமாகவும் அடிக்கடி தொடர்பு கொள்ளுங்கள். சகல ஜனங்களுக்கும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும், வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நன்மை செய்யுங்கள். (கலா 6:10) படுக்கைக்கு செல்லுமுன், அந்த நாள் முழுவதிலும், நீங்கள் தேவனோடு பெற்ற அந்த நல்லுறவுக்காக நன்றிகளை ஏறெடுத்து ஜெபியுங்கள்.

## சிக்கிகொண்டபின் பாவங்களை அகற்றுவது

தலை மற்றும் கரங்களின் பாவங்களில் பழக்கங்களில் சிக்கிகொண்டால் ஒருவர் என்ன செய்வது ? நம்முடைய பரலோகத்தில் இருக்கும் பிதா மட்டுமே, நாம் தானாக சிக்கிக் கொண்டிருக்கும் பாவத்திலிருந்தும் தீமையிலிருந்தும் விடுவிக்க முடியும் என்பதினால் அதிலிருந்து மீட்கப்படுவதற்காகவும், செய்த பாவங்களை முதலில் அறிக்கையிட்டு, அதற்காக மன்னிப்பை கேட்டு, அதிலிருந்து விடுபட ஜெபியுங்கள். பூமிக்குரிய ஒரு கனிவுள்ள தந்தையைப்போல, தன்னுடைய பிள்ளை உபத்திரவத்தில் அகப்பட்டு,எந்த இரவில் கூப்பிட்டாலும் சரி, எங்கிருந்தாலும் சரி, எப்படிப்பட்ட உதவிகளையும் செய்ய நம்முடைய பரலோகப்பிதா விரைந்து செயல் படுகிறார். (1பேதுரு 5:7) விடுவிக்கப்பட்டபின், சற்று தரித்து நின்று, உங்கள் ஆவிக்குரிய பலவீனங்களையும், பலத்தையும் பட்டியலிடுங்கள் இவைகளை எழுதுங்கள். ஒரு காரியத்தில் நீங்கள் பலவீனமுள்ளவர்கள் என்று அறிந்தால், அவைகளினால் வரும் சோதனைகள் உங்களுக்கு, கடுமையாக இருக்கும் பட்சத்தில் அந்த காரியத்திலிருந்து விலகியிருங்கள் (1தீமோ 6:8-11, 1கொரி 6:18) அந்த காரியத்தில் உங்களை சிக்கவைக்கக்கூடிய வழிகளும், நண்பர்களும், மற்ற எல்லா காரியங்களையும் நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். ஆகையால் அவைகளை விட்டு விலகி - தேவனுடைய வார்த்தையாகிய விளக்கு பிரகாசிக்கும் பாதையில் நடவுங்கள். அப்போது நீங்கள் இடற மாட்டீர்கள் அல்லது அறியாமலும் பிரச்சனைக்குள் பிரவேசிக்க மாட்டீர்கள். ஆனால் "உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்ற." (சங் 119:105, எபி 13:5) எண்ணங்கள் உங்களை திருப்திப்படுத்தும்.

பாவத்தில் அகப்பட்டோரை, முற்றுகையிட்ட பட்டணத்திற்கு ஒப்பிடலாம். அந்த பட்டணத்தை எளிதில் பிடிக்க, அந்த பட்டணத்தின் பாதுகாப்பைக் குறித்து எதிராளியின் சேனைகள் முதலாவது பொதுவாக நன்று ஆராய்வார்கள். அதேபோல, ஒவ்வொரு கிறிஸ்தவரின் இருதயத்தையும் (சிந்தை அல்லது சித்தம்) சாத்தான் ஆராய்கிறான். ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய இருதயத்தை முழு காவலோடு காத்துக் கொள்ளவேண்டும். (நீதி 4:23) முதலில், மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு சாத்தான் தன்னுடைய சிறிய படையாகிய "சந்தேகங்கள் மற்றும் கொஞ்சம் பயங்களை" அனுப்பி நம்முடைய வல்லமையும், பலமான கோட்டைகளும் எந்த நிலையில் உள்ளது என்று சோதித்து அறிந்துகொள்ளுகிறான். அதைத் தொடர்ந்து நம்மை சுற்றியுள்ள பாதுகாப்பு அதாவது உயரமாக இருக்கவேண்டிய விசுவாசத்தின் சுவருகள் எதிரிகள் எளிதில் நுழையும் அளவுக்கு எங்கெல்லாம் குறைவாக இருக்கிறது என்றும், நம்முடைய இருதயத்தில் உள்ள வாசல்களில் எந்த இடத்தில் காவலாளிகள் குறைவாக இருக்கிறார்கள் என்பதை ஓயாமல் கவனித்துக் கொண்டிருக்கிறான். (1பேதுரு 5:8)

பொறுமை, சுயநலம், மிகப்பெரிய அளவில் தோன்றும் பயங்களை பயன்டுத்தி நம்முடைய விசுவாசத்திற்கு விரோதமான சோதனைகளை சாத்தான் ஏற்படுத்துவான். ஆனால் இந்த முறை நாம் எதிர்பாராத நேரத்திலும், நம்முடைய காவலாளிகள் அனைவரும் நித்திரைக்குச் சென்றபின் இது சம்பவிக்கும். அப்போது நம்முடைய இருதயத்தின் வாசல் வழியாக சோதனை கடந்துவரும். நாம் இதை உணரும் பட்சத்தில் உடனடியாக தேவனிடத்தில் மனத்தாழ்மையோடு மனந்திரும்ப வேண்டும். நம்முடைய வழிகளை மாற்றிக் கொண்டு, முழு உள்ளத்தோடு மனந்திரும்பி, நம்முடைய வாழக்கையில் நீதியை

செய்யும்போது அன்று இஸ்ரயேலர்களை தேவன் தப்புவித்ததுப்போல, நம்மையும், நம்முடைய எதிரிகளிடமிருந்து தப்புவிப்பார். (1சாமு 7:3) அப்போது நமக்குள் தோன்றின பயங்களையும், நமக்குள் நம்மைப்பற்றி கற்பனைக்கு எட்டாத அளவு உயர்வாக நினைத்து கொண்டிருக்கும் பெருமையான நினைவுகளையும், அவைகளினால் நமக்கு முன் நிற்கும் நம்முடைய பேராசைகளையும், ஒரே கல்லினால் முறியடிக்க நம்முடைய சிந்தையில் கவண் கற்களைப்போல, வலுவான வீரர்களைப்போல உறுதியான சத்தியங்களை அனுப்புவார்.


(11கொரி 10:4,5, ரோ12:3)

மேலும் பாவத்தில் அகப்பட்டவர்களை, வியாதியுள்ளவர்களைப் போலவும் காணலாம். பாவவியாதிப்பட்டவர் பரமவைத்தியனை அழைக்கவேண்டும். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. " (யாக் 5:16) நாம் ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய பழக்கவழக்கங்களில் அகப்படும்போது பவுல் நமக்கு அளித்த ஆலோசனையைக் கேட்டு நம்மை நாம் மாற்றிக்கொள்ளவேண்டும். "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள், அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.." (பிலி 4:8,9)

நம்முடைய விருப்பத்தின்படி நடப்பதற்கு அல்ல, நாம் பெற்ற ஆவியின்படி, தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்துக்கொண்டு, நம்முடைய ஆண்டவராம் இயேசு நமக்கு முன்னோடியாக திறந்து வைத்திருக்கும் புதிதும், ஜீவனுமான வழியில் தாழ்மையோடு நடப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவன் விழுந்துப்போன மாம்ச கிரியைகளுக்கு என்றுமே இரக்கம் காட்டக்கூடாது. அதற்குப் பதிலாக நம்முடைய தலையிலும், கரங்களிலும் உள்ள பாவங்களை அகற்றி, இதே காரியங்களைச் செய்ய நம்முடைய சகோதர சகோதிரிகளையும் ஊக்குவிக்கவேண்டும். புது சிருஷ்டி தேவன்மேல் விசுவாசம் வைத்து, அவர் மேற்கொள்ளுகிற செயல்களைக் கவனித்து, வசனங்களை வாசித்து கிறிஸ்துவின் வார்த்தைகளையும் அவருடைய வாழ்க்கையையும் நன்கு படித்து, தன்னுடைய நடக்கையில் கவனம் வைத்தவர்களாக, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி தன்னுடைய விரோதிகளையும் மன்னித்து, நன்றியுள்ளவர்களாக இருந்து, மற்ற விசுவாசிகளுக்கு மாதிரிகளாக நடந்து, சோதனையில் நுழையும்போது ஜெபிக்கவேண்டும். (1கொ 10:12)

## காலேப்

தீமையான செய்திகளை அறிவித்த, பத்து வேவுக்காரர்களோடிருந்த காலேபின் மேன்மையான வார்த்தைகளைக் குறிப்பிடுவது மனதுக்கு உகந்ததாக இருக்கிறது. காலேபுடன் சென்ற அந்த பத்து பேரைப்பற்றி தவறாக பேசுவதற்கும், தன்னுடைய நிலையை, ஒப்பிட்டு தன்னுடைய சொந்த விசுவாசத்தை மகிமைப்படுத்தி மற்றவர்களை இழிவாக நோக்குவதற்கும் காலேபுக்கு ஒரு சிறந்த வாய்ப்பு கிடைத்தது. ஆனால் காலேப் அப்படி செய்யவில்லை. மற்றவர்கள் செய்த எல்லா தவறுகளையும் சுட்டிக்காட்டாமலும், காயப்படுத்தாமலும், மிகச் சாந்தமாக, அவர்கள் குற்றத்தைப் பொருட்படுத்தாமலும் பேசினார். அவர்களை குற்றம் சாட்டி, நிந்தித்து தூஷிப்பதற்குப் பதிலாக "என் சகோதரர்கள்" என்று பேசினார். இதே மனநிலையை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் கொண்டிருக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, அந்த அபிஷேகத்தினால் "தேவனுடைய ஆழமான காரியங்களைக்" கற்று அறிந்திருப்பதால் காலேபைவிட நம்மிடத்தில் இந்த மனப்பக்குவம் அதிகமாகவே காணப்படவேண்டும். ஆகவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அதிக நன்மையும் மேன்மையான காரியங்களுக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் - Reprints, p. 3091



பாகம் 2 - அநீதி நிறைந்த உலகம்

# நாவுக்கு கடிவாளம் இடு

*உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும் -யாக்கோபு 1:26*

பரிசுத்த ஆவியினால் தங்களுடைய வாழ்க்கையை மறுரூபமாக்கிக் கொண்டிருக்கும் உண்மையான கிறிஸ்தவர்களுக்கு அதாவது, நம்முடைய ஆண்டவரைப் பின்பற்றுவதற்கு உடன்படிக்கை செய்த அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு இந்த வேதப்பகுதி பொருந்தும்.

நம்முடைய உடன்படிக்கை அங்கீகரிக்கப பட்டப்பின், கோபம், பகை, விரோதம் பொறாமை, புறம்கூறுதல் மற்றும் இன்னும் மாம்சத்தின் கிரியைகளை நம்முடைய வாழ்க்கையிலிருந்து விட்டுவிட முயற்சிப்போம். வசனங்களை ஆழமாக தியானிப்பதினால் மட்டுமே நாம் இந்த நிலைக்கு வரமுடியாது. நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து, தெய்வீக கோட்பாடுகளின் வழிநடத்துதலோடு சுயபரிசோதனைச் செய்யவேண்டும்.

புது சிருஷ்டி என்னும் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றநாம், நாளுக்குநாள் அல்லது ஒவ்வொரு நேரத்திலும் நமக்குள் நுழையும் தவறான சிந்தைகளை வெளியேற்றவேண்டும். இப்படிப்பட்ட சிந்தைகளை புது சிருஷ்டி என்றுமே அங்கீகரிக்கக்கூடாது. ஏனெனில் மனதில் வேர்விட்டு நமக்குள் வளர்ந்துக் கொண்டிருக்கும் தேவநீதியை இப்படிப்பட்ட சிந்தைகள் நெரித்துவிடும்.

பவுல் - "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." (பிலி 4:8) என்று சிந்தனைகளை சீர்ப்படுத்தவும், அதனால் நம்முடைய நாவை அடக்குவதற்கும் தேவையான பலத்த ஆலோசனையை வழங்குகிறார்.

முதலாவதாக உண்மையைக் குறித்து பேசுகிறார். சிந்தனைகளை கறைப்படுத்தும் வதந்திகள், புறம்கூறுதல்கள் போன்றவைகளை தள்ளிவிடவேண்டும். மேலும், அர்ப்பணிக்கப்பட்ட நம்முடைய நேரத்தை இதில் வீணாக செலவழிக்காமல் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின்மேல் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

அடுத்து, ஒழுக்கத்தைக் குறித்து பேசுகிறார். எந்தவிதமான வஞ்சகம், பாசாங்கு, போலித்தனம் மற்றும் சதியாலோசனைகளையும் நாம் உடனடியாக நிராகரிக்கவேண்டும். சில நேரங்களில் நம்முடைய அயலகத்தார், உற்றார் நண்பர்கள் மற்றும் சகோதரர்களைப்பற்றிய உண்மையான காரியங்கள் (ஒழுக்கக்கேடு, மரியாதைக் குறைவு, இழிவான காரியங்கள்) நம்முடைய சிந்தையில் எழுவதுண்டு. நம்முடைய உதடுகளினால் பாவம் செய்வதற்கு முன்னதாகவே அவைகளைப்பற்றிய சிந்தையை உடனடியாகக் களைந்துவிடவேண்டும்.

நீதியுள்ளவைகள் எவைகளோ - உண்மையில் நடந்து கொண்டிருக்கும் அநீதிகள் அல்லது கற்பனை செய்யப்பட்டவைகள், நேர்மையற்ற செயல்கள் போன்றவைகளை தியானிப்பதை விட்டுவிட்டு, நீதியுள்ள காரியங்களை மட்டுமே நாம் சிந்திக்கவேண்டும் - நீதியும், நேர்மையுமான கோட்பாடுகளை நாம் சிந்தித்து தியானிக்கவேண்டும். ஏனெனில் "இன்றைய தீமை நிறைந்த உலகத்தில்" வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் தீமையாக பேசப்படும்போதும், அல்லது தவறாக புரிந்துகொள்ளப்படும் போதும், நாம் முறுமுறுக்காமலும், மற்றவர்களை குற்றம் சாட்டாமலும், அந்த உபத்திரவங்களை சந்தோஷமாக சகித்துக்கொள்ள வேண்டும்.

கற்புள்ளவைகள் எவைகளோ - ஜனங்களின் செயல்பாடுகள், எங்கு பார்த்தாலும் அநீதி, கேலி பேச்சுக்கள், அரட்டை, ஆபாசமான விளம்பரங்கள், செய்தி தாள்களில் விளம்பரங்கள், கார்களில் ஒட்டவைக்கப்படும் படங்கள், வியாபாரம், விமர்சகர்கள் அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உட்பட நம்மைச்சுற்றி எங்கும் அசுத்தம் காணப்படுகிறது. இப்படிப்பட்ட காரியங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவங்களை நாம் தவிர்ப்போம். நம்முடைய ஆண்டவராம் இயேசு இதற்கு நேர்த்தியான ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார். நம்முடைய எல்லா சிந்தனைகளையும் இயேசுவின் குணங்களுக்கு கீழ்ப்படுத்த முயற்சிக்கவேண்டும். அப்பொழுது, நமக்கு முன் வைக்கப்படும் எந்தவிதமான அசுத்தங்களும் நமக்குள் அனுமதிக்க ஊக்குவிக்கப்படாது.

அடுத்து, அன்புள்ள காரியங்களை மட்டுமே நாம் சிந்திக்கவேண்டும் - நாம் தொடர்ச்சியாக உலகத்தைச் சார்ந்த காரியங்களை, விசேஷமாக நம்முடைய வேலைகள் முடிந்தபின், ஓய்வு நேரங்களில் அவைகளை மட்டுமே குறித்து சிந்திக்கவேண்டிய அவசியமில்லை. மாறாக, மற்றவர்களும் பயனடையும்படி, ஆவியின்

கனிகளையும், கிருபைகளையும் நம்முடைய வாழ்க்கையில் எப்படியாக வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை சிந்திக்கவேண்டும். இவைகளை நாம் நினைவில் கொண்டவர்களாக, இந்த வழியில் நடத்துவதற்காக தேவனைப் புகழந்து அவருக்கு நன்றிகளை ஏறெடுக்கும்போது, நாம் அன்பில் மேலும் வளர்ச்சி அடையலாம்.

வேதாகமம் நற்கீர்த்தி என்று அங்கீகரிக்கக்கூடிய எல்லாக் காரியங்களையும் நாம் சிந்திக்கவேண்டும். பெருமதிப்பு பெற்ற பாத்திரங்களைப்பற்றியும், அவர்களின் மேன்மையான செயல்கள் மற்றும் நாம் மறுரூபமாக்கப்படுவதற்கு உதவியாக இருக்கும் சகல மாதிரிகளையும், பாடங்களையும் சம்பவங்களையும் சிந்தித்துக் கொண்டே இருக்கலாம்.

"புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." என்ற வார்த்தைகளோடு பவுலின் எச்சரிப்பு முடிவு பெறுகிறது. தேவன் புகழக்கூடிய காரியங்களையும், நாம் அவரை இன்னும் அதிகமாகப் புகழக்கூடியவைகளையும், அவருடைய பார்வையில் முழு அங்கீகாரம் பெற்ற காரியங்களையும் முதலில் தேட வேண்டும். நாம் சரியான பழக்கங்களைப் பழகுவதற்கு இப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்கும் பட்சத்தில் நிச்சயமாக நம்முடைய வாயின் வார்த்தைகள் சுத்திகரிக்கப்படும்.

யாக்கோபு - யாக்கோபு 3ம் அதிகாரத்தில் நாவைப்பற்றி அதிகமானக் காரியங்கள் குறிப்பிடப்படுகிறது. மேலும் யாக்கோபு 1:19,26, 2:12, 4:11 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவனுடைய வார்த்தைகளைப் போதிப்பதற்கு துரிதமான விருப்பம் கொண்டவர்கள், இப்படிப்பட்ட வேலையின் பொறுப்புகளையும், அதனால் பெறும் சிறப்புரிமைகளையும் நிதானமாக சீர் தூக்கிப்பார்த்து அதற்குப்பின் முடிவு எடுக்கவேண்டும் என்ற எச்சரிப்போடு யாக்கோபு தன்னுடைய பாடத்தைத் துவக்குகிறார். ஆயினும், இதற்கு அப்பாற்பட்டு, ஒரு விசுவாசி சம்பாஷிக்கக்கூடிய விதத்தில் சரீரத்தில் உள்ள நாவை அடக்குவதே மிகக்கடினமான காரியம் என்று கருதுகிறார். இந்த நாவு இருதயத்தின் நிலையை எடுத்துக்காட்டும் குறிக்காட்டியாக இருப்பதினால் - "இருதயத்தின் எண்ணம் வாய் பேசும்" என்று நம்முடைய ஆண்டவர் அறிவிக்கிறார். (மத் 12:34) ஆதாமின் மீறுதலின் வழியாகவந்த பாவத்தில் அகப்படாமல், பூரணநிலையில் இருந்த இயேசு மட்டுமே - சத்தியத்தையும், நீதியையும், பரிசுத்தத்தையும் முழுமையாகப் பேசமுடிந்தது. புது சிருஷ்டிகளாக இருக்கக்கூடியவர்கள் பரிசுத்த ஆவியின் முழுமையான தூண்டுதலினால் மட்டுமே இந்த விழுந்துபோன நிலையில், கேட்போருக்கு நன்மையானதும், உற்சாகமூட்டக்கூடியதும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவான வார்த்தைகளைப் பேசமுடியும்.

புது சிந்தை நாவின் வல்லமையை ஆண்டு கொள்வதை ஒரு குதிரையை அடக்கக்கூடிய கடிவாளத்திற்கு யாக்கோபு ஒப்பிடுகிறார் இந்த கடிவாளம் குதிரையின் வாய் பகுதியைச் சுற்றியுள்ள ஒரு சிறிய உலோக வளையமாகும். இது மிகச் சிறியதாக இருப்பினும், இது குதிரையை முழுமையாக கட்டுப்படுத்த உதவுகிறது. கடிவாளம் இல்லாத குதிரைகள் கட்டுக்கு அடங்காமல், எளிதில் ஓடிவிடும் அல்லது ஓட்டுனரையே தூக்கி எறிந்துவிடும். அதேபோல, நம்முடைய வார்த்தைகளின் மேல் எச்சரிப்பான கண்காணிப்பு இல்லை என்றால், நம்முடைய விசுவாசவளர்ச்சி நிச்சயமாகத் தடைப்படும்.

மேலும் நாவை நெருப்புக்கு ஒப்பிடப்படுகிறது. மற்றவர்களின் சிந்தையில், தவறானப் பேச்சுகள் அல்லது புறங்கூறுதலை நுழைப்பது, காட்டை கொளுத்திவிடும் ஒரு தீக்குச்சிக்கு ஒப்பாக இருக்கிறது. இது மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தி, அனைத்தையும் பாழாக்கி விடுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

காட்டு மிருகங்கள், சிறகுள்ள பறவைகள், அநேகவிதமான ஊர்வனவைகள் போன்ற ஜீவன்களை நாம் எளிதில் பழக்கப்படுத்தி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரலாம். ஆயினும், மனுஷன் காட்டு மிருகங்களைக் கட்டுப்படுத்துவதில் வெற்றியடைவதுப்போல, தன்னுடைய சொந்த நாவை கட்டுப்படுத்த முடிவதில்லை. ஏனெனில், சொல்லப்படாத தீமைகளை மற்றவர்கள் வாழ்க்கையில் செலுத்திவிடுகிறது. ஆகவே இந்த நாவு முழுமையான விஷம் நிறைந்தது என்று யாக்கோபு விவரிக்கிறார். (யாக் 3:8) வீண் பேச்சுகள் மற்றும் குணலட்சணங்ளை **சீர்குலைக்கக்கூடிய பேச்சுக்களைப்** பொறுத்தவரைக்கும் "இதை உன்னுடன் மட்டுமே வைத்துக்கொள்", "உனக்கு தெரியுமா" " அல்லது "இதை என்னால் உனக்குச் சொல்லமுடியாது, ஆனால் இதற்கு மேலே நடக்கும் என்று எனக்கு நல்லா தெரியுமா" என்ற வார்த்தைகளினால் துவங்கும் சம்பாஷணைகள் பேசக்கூடியவர்கள் மற்றும் கேட்கக்கூடியவர்களின் சிந்தையிலும், இருதயத்திலும் நஞ்சை கலந்து விடுகிறது.

நன்மைக்கும், தீமைக்கும் நாவை பயன்படுத்துவது முரண்பாடாக இருக்கும்." அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம், தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா ? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும்,

திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா ? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. .." (யாக் 3:9-12) தேவனுடைய ஜனங்களோடு, பரலோகப் பிதாவை துதித்து ஆராதித்து புகழ்ந்தபின் வேறொருவரிடம் மற்றவர்களைக் குறித்து வில்லத்தனமாக புறங்கூறுவது, தேவனுக்கு முன் பாசாங்கு செய்வதாகும். ஆண்டவரை நேசிக்கிறேன் என்று ஒருவர் கூறிக்கொண்டு, மற்றவர்களைக் காயப்படுத்தும் அளவுக்கு கசப்பான வார்த்தைகளைப் பேசினால், கிறிஸ்துவின் குணங்களை வெளிப்படுத்த முயற்சிக்கும் ஒரு உண்மையாக கிறிஸ்தவனுக்கு சவாலாகவே இருக்கும் - உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங் களையும் கொடுக்குமா ? என்று யாக்கோபு இந்த முரண்பாடுகளை விவரிக்கிறார். ஏனெனில், இயற்கையாகவே இவைகள் நடப்பதில்லை, அதுபோல, நம்முடைய வாழ்க்கையிலும் இந்த முரண்பாடுகள் ஏற்படாமல் இருந்தால் நலமாயிருக்கும்.


நித்தமும் நம்முடைய கணக்குகளை தேவனிடம் ஒப்படைத்து, சகலத்தையும் மேற்கொள்ளக்கூடிய வல்லமையான கிருபைகளுக்காக தேவனுடைய சமூகத்தில் நித்தமும் மன்றாடினால், நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்து, கிறிஸ்துவின் வழியாக தேவனுக்கு முன்பாக நிற்பதற்கு அனுமதிக்கப்பட்டவர் களாகவும், நாம் தேவனுக்கு பிரியமாகவும், அவரால் அங்கீகரிக்கப பட்டவர்களாகவும் இருக்கிறோம் என்பதை அவருடைய பரிசுத்த ஆவி நம்முடைய ஆவியோடேகூட சாட்சி பகரும். ஆகவே அன்பான சகோதர சகோதரிகளே நாவினால் பாவம் செய்யாதபடிக்கு நம்முடைய நடைகளைக் காத்துக் கொள்ளலாம். (சங்க 39:1)

"நாவைவிட வல்லமையானது ஒன்றும் இல்லை. நன்மையான வார்த்தை, நன்மையான சிந்தை, உலக அளவில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். ஆனால் தீமையான சிந்தை, தீமையான வார்த்தைகளின் விளைவு இந்த உலகத்தின் முடிவுபரியந்தம் நிலைநிற்கும். "(Reprints, p.4805)



ஆகையால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சகல வாக்குறுதிகளையும் ஒருவர் முழு விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் செயல்படுத்த விருப்பமும் வல்லமையுள்ள வராகவும் இருந்தால், அவர் ஜெயத்திற்குமேல் ஜெயம் பெற்று, ஆசீருக்குமேல் ஆசீர் பெற்று, மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சியடைந்து ஆவிக்குரிய காரியங்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்றுக்கொண்டு, இறுதியில், தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டு நம்மை நேசித்து, தொடர்ந்து வழி நடத்தினவரின் ஈடுபலியின் நன்மையினால் இந்த உலகம், மாம்சம், சாத்தான் - ஆகிய இம்மூன்றின் மேலும் சிறந்து வெற்றி பெறுவார். தாவீதின் கவண் கல்லுக்குமுன் கோலியாத் நிலைநிற்க முடியாததுபோல, இராட்சதர்களைப்போல வரும் எதிர்ப்புகளும், ஏமாற்றங்களும் இந்த வகுப்பாரின் முன்நிற்க திராணியில்லாமல், சாய்ந்துபோகும்.

-Reprints, p.4046



பாகம் 3 : இன்னும் சில பயனுள்ள போதனைகள்

# தேவனுடைய பிரமாணங்களைக் கனப்படுத்துங்கள்

*ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமதுபேரிலே தானே ஆணையிட்டு -எபி 6:13*

ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்கு தேவைப்படும் மற்ற பயனுள்ள போதனைகள் குறிப்பாக ஏதும் சொல்லப் படவில்லை. ஆனால் சில போதனைகள் அதற்கு நெருங்கியிருக்கிறது. தேவன் செய்வேன் என்று ஆணையிட்ட காரியங்களுக்கு எதிராகவோ, முரண்பாடாகவோ செயல்படுவது மூடத்தனமாகவும் அவிசுவாசத்தை பிரதிபலிக்கக்கூடிய காரியமாகவும் இருக்கும். "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்றும், அதற்குபின் " ... உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.." என்றும் கர்த்தர் பேரில் ஆணையிட்டுக் கொண்டார். (ஆதி 12:3, 22:18)

தேவனும், கிறிஸ்துவும் சகல குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார்கள் என்பதையும், கிறிஸ்துவின் கீழ் சகலஜாதிகளும் இசைவாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதையும் நம்பாவிட்டால், அது நம்முடைய அவிசுவாசத்தை வெளிப்படுத்தும் அல்லவா? சகல என்பதை சிலர் மாத்திரமே குறிக்கும் என நாம் போதித்தால், தேவன் பொய்யராகிவிடுவார் அல்லவா ? அவரை நாம் மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார் அல்லவா ? (11தீமோ 2:12)

தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நீங்கள் விசுவாசிப்பதன் மூலம் வரும் பலன்களை சற்று கருத்தில் கொள்ளுங்கள். திரளான ஜனங்களை தேவன் நித்தியமாக உபத்திரவப்படுத்துவார் என்று நாம் போதித்தால், இதை கேட்கக்கூடியவர்கள் தங்களுக்கு விரோதமாக செயல்படுபவர்களைப் பழிவாங்குவது நியாயமான செயலாக மாறிவிடுமே. ஏனெனில், தேவனோடு இவர்களை ஒப்பிடுகையில் தேவனைக் காட்டிலும் இவர்கள் குறைவான தீங்கைச் செய்பவர்களாக இருக்கிறார்கள் அல்லவா ?

இதற்கு எதிரிடையாக, தேவன் பெரும்பாலான மனுக்குலத்தை சீர்பொருத்துவார் என்று போதித்தால், ஒருவருடைய எதிராளிகளையும் நேசிக்கவேண்டும் என்ற பாடத்தைக் கற்றுக்கொள்ள ஒரு காரணம் இருக்கும். (மத் 5:44) இன்று நம்முடைய எதிராளிகளை நேசிக்கக்கூடிய அன்பை கற்றுக்கொள்ளாவிட்டால், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பூமியின் மேலுள்ள சகல குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்கு ஆபிரகாமின் சந்ததியின் அங்கமாக நாம் மாற இயலாது.


### கவனத்தை திசைத்திருப்புவதன் மூலம் தோற்கடிப்பது

ஒரு சத்தியத்தை சாத்தான் பலமுறை தாக்கியிருக்கிறான், ஆனால் அதன் தலையில் அல்ல, அதற்குப் பதிலாக அதன் பக்கங்களிலும், அதை சுற்றியும் அவன் செயலாற்றுகிறான். கிபி 313ல் உலகளவில் அலக்சாண்டிரியா சபையில் நடத்தப்பட்ட கூட்டத்தில், ஆதிகால சத்தியத்தின் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள ஏரியஸ் மன்றாடினபோது, ஏரியஸ் குற்றம் சாட்டப்படாத அளவுக்கு அத்தேநேசியஸ் பதில் அளித்தான். ஆனால் பாரம்பரிய மத போதனைக்கு எதிராக அவன் குற்றம் சாட்டினான் - அதாவது சகலத்திற்கும் முன்னதாகவே இயேசு சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும், அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதற்கு விரோதமான மத உபதேசத்தை ஆதாரமாகக் கொண்டு குற்றம் சாட்டினான். இந்த இருதரத்தினர் மத்தியிலுள்ள பிரச்சனைகள் மீண்டும் ஆராய்ச்சி செய்யாமலும், எவ்விதத்திலும் பிரச்சனைகளைத் தீர்க்காமல் ஏரியஸ்க்கு விஷம் கொடுத்துவிட்டார்கள். இப்படியாக ஒழுக்கக்கேடுகளும், வன்முறைகளும் ஆதிகால சபையை ஆக்கிரமித்தது.

### நவீன அபாயங்கள்

"இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார். அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்." (1யோவ 4:15) என்று அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறார். ஆனால் இன்று -"இயேசுவே தேவன் என்று அறிக்கையிடுகிறவர்கள்..." என்று யோவான் சொல்லி யிருக்கவேண்டும் என்று அநேகர் சிந்திக் கிறார்கள். நம்முடைய தேவன் திரியேக தேவனாக இருக்கிறார் என்று விசுவாசியாதவர்கள், கிறிஸ்தவர் களாக இருக்க முடியாது என்று பெரும்பாலான கிறிஸ்துவ அமைப்புகள் தீர்மானித்துள்ளது. இவ்வளவு தவறான காரியத்திற்கு அப்பாற்பட்டு, தேவன் பூமியிலுள்ள முழுக்குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார் என்ற வாக்குத்தத்தங்கள் நடந்தால் என்ன? நடக்காமற் போனால் என்ன? என்ற சிந்தனைக்கு வழிநடத்தப்படுகிறார்கள். இயேசுவின் பிறப்பின்போது தூதர்களால் அறிவிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் அல்லது தேவன் வாக்குத்தத்தம் செய்ததை அவர் நிறை வேற்றுவாரா ? போன்ற காரியங்களை யோசிப்பது தேவையற்ற காரியங்கள் என்று விட்டுவிட்டார்கள்.

கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் இந்த உலகத்திற்கு கிறிஸ்து என்ன செய்யப்போகிறார் என்றும், தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை எவ்வாறு நிறைவேற்றுவார் என்றும் இந்த உலகத்திற்கு சொல்லமுடியாத அளவுக்கு - கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேவனுடைய இராஜ்யம் துவங்குகிறதா ? அல்லது சபை எப்போது நிறைவடையும் என்று ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டு நாம் மெய்மறந்திருக்கிறோமா ? ஆகவே, நாம் தேவனுடைய உடன்படிக்கைகளை விசுவாசிப்போம், அதற்கு இசைவான வாழ்க்கையை வாழுவோம்.



பாகம் 3 : காரணமும், விளைவும்

# பயனுள்ள போதனைகள்

*நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்*

*- யோவான் 13:17*

வேதாகமத்திலுள்ள அனைத்து பயனுள்ள உபதேசங்களும் அதிகாரமுள்ள கட்டளையாக வேதாகமம் அறிவிப்பதில்லை. (சில நேரங்களில் மனிதன் அதை கட்டளையாக ஏற்றுகொண்டாலும்) இவைகள் சகோதர ஐக்கியத்தை சோதிப்பதற்காக கிறஸ்தவர்கள் பயன்படுத்த முயற்சிக்காமல் இருந்தாலும் அவர்களின் நடத்தை வெளிச்சத்திலே வழிநடத்தப்படவேண்டும். மேலும், அந்த வெளிச்சத்தை மற்றவர்களிடமும் பிரகாசிக்கவேண்டும். இதற்கான மூன்று எடுத்துகாட்டுகள் -

* சீரழிந்துக் கொண்டிருக்கும் மனுக்குலத்தை அல்லது சீர்க்குலைந்துக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களை மேலோட்டமாக நாம் பார்க்கும்போது, இயேசு கிறிஸ்துவின் ஈடுபலி மற்றும் அதன் பலனாக மிகப்பெரிய அளவில் வரும் சீர்ப்பொருந்துதல், நமக்கு புதியதோர் நம்பிக்கையைக் கொடுக்கிறது.

* விதிமுறைகளுக்கு உட்பட்டு கீழ்படிதலுக்கு கிடைக்கும் பலன் அழியாமை என்பதை அறிந்தபின் தேவையில்லாத பயங்களை போக்கிவிடும்.

* பாவநிவாரண பலியின்போது செலுத்தப்படுகிற இரண்டு பலிகளின் கருத்து - நாம் ஜீவபலி செலுத்த வேண்டும் என்ற பொறுப்புக்களை வலுவாகப் பலப்படுத்துகிறது.

அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய போதனை முதலாம் சபையின் காலத்திற்கு அல்லது அந்திக்கிறிஸ்து ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் தேவையற்றதாக இருந்தது. (1யோவ 2:18) அதேபோல, கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருத்தலுக்கான செயல்முறை முக்கியத்துவங்கள், இயேசு வருவதற்கு சற்று முன்னதாகவே அவசியமானது. (மத் 13:30, வெளி 18:1-5) ஆயினும், சில நேரங்களில் சில காரியங்களை சரியான நேரத்தில் கவனியாமல் விட்டுவிடுவது பாதகமாக இருப்பினும், அவர்களை எதிரிகளாக பாவிக்கக்கூடாது.

## சீர்ப்பொருந்துதல்/திரும்பபெறுதல்

தேவனுடைய சித்தத்தினால் "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்."( எபி 10:10)அனைவரும் நன்மை அடையவேண்டும் அல்லவா ? "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே, நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்..." (1யோவ 2:2) . குறித்த காலத்தில் "அனைவருக்காகவும் கொடுக்கப்பட்ட ஈடுபலியின்" நிமித்தம் நாம் நம்முடைய நன்றிகளை ஆண்டவராம் இயேசுவுக்கு செலுத்துகிறோம். அதேநேரத்தில், அவரை அனுப்பிய பிதாவுக்கு செலுத்தக்கூடிய நன்றிகள் அதற்குக் குறைவானது அல்ல.

இயேசு கிறிஸ்து ஒரேமுறை அனைவருக்கும் மரித்ததால், ஒவ்வொரு புருஷனுக்கும், ஸ்திரீக்கும் குழந்தைக்கும் முழுமையான ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும் ".. பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். " (யோவா 5:28,29) சுவிசேஷ யுகத்தில், சோதிக்கப்பட்டு தங்களுடைய விசுவாசத்தை நிரூபித்தவர்கள் (நன்மை செய்தவர்கள்) அழியா ஜீவனுக்குரிய உயிர்த்தெழுதலை பெறுவார்கள். மீதியுள்ள உலக ஜனங்கள் (தீமை செய்தவர்கள்) கிறிஸ்துவும் சபையும் ஆட்சி செய்யக்கூடிய ஆயிர வருஷத்தின் போது உயிர்த்தெழுந்து, நீதியில் பயிற்சிப்பெற்று, அந்த இராஜ்யத்திற்கு பாத்திரவான்களாக இருக்கிறார்களா என்று அந்த ஆயிர வருட ஆட்சியின் முடிவில் நியாயத்தீர்க்கப்படுவார்கள்.

"உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் ..." என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தபோது " உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் .." என்றும் வாக்குறுதியளித்தார். (ஆதி 22:16-18) அந்த ஆயிர வருட ஆட்சியின் முடிவில் சாத்தானை பின்பற்றிப்போகும் ஜனங்களை

"பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான், அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். ..." (வெளி 20:8) கிறிஸ்துவே ஜெயிப்பார். ஆகவே கிறிஸ்துவும் விசுவாசமுள்ள சபையும், விஸ்தாரமான இந்த முழுமனுக்குலத்தை வெற்றிகரமாக பூரண நிலைக்கு கொண்டுவந்து, அவர்கள் நித்தியமாக ஜீவனைப் பெறுவதற்கு முயற்சிப்பார்கள். ஆகவே நாம் இப்போது அனைவரும் திருந்தப் போகிறார்கள் என்ற சிந்தையோடு காணவேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசிக்கக் கூடியதன் விளைவாக ஒவ்வொருவரும், இன்று வெவ்வேறு நிலையிலுள்ள சரிந்த மனுக்குலத்தைப் பாராமல், கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின் முடிவில், ஏதேனில் தொலைந்துபோன பூரண நிலையை பெறப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்போடு அவர்களை காணவேண்டும். ஆகவே "உங்கள் சத்துருக்களையும்

சிநேகியுங்கள்" என்ற கட்டளையைப் பெற்றிருக்கிறோம் (மத் 5:44)

### விதிமுறைக்குட்பட்ட அழியாமை

மரணம் எப்போதும் ஒரு சத்துருவாக இருக்கிறது. ஆகையால் மனுஷன் மரணத்தைக் கண்டு அஞ்சுவது ஆச்சரியம் அல்ல. ஆனால் மரணம் என்றால் என்ன?

ஆதாம் மரணத்தைக் காண்பதற்கு முன், "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி -நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம், ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதி 2:16,17)என்று தேவன் கூறினார். இயேசு தம்முடைய சிநேகிதனாகிய லாசருவை மரணத்தின் நித்திரையிலிருந்து எழுப்பியபோது, அந்த நான்கு நாட்களில் நடந்த காரியங்களைப்பற்றி ஏதும் சொல்லவில்லை. அதேபோல இயேசு கல்லறையிலிருந்த மூன்று நாட்களிலும் நடந்தவைகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ 6:23) என்று எளிமையாக பவுல் கூறுகிறார்.

இந்த குறிப்புகள் அனைத்துமே மரணத்தில் "உணர்வுள்ள நிலை" இருப்பதாக குறிப்பிடவில்லை. " உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய், நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிர 9:5,10) என்று ஞானி எழுதுகிறார். "அனஸ்த்தீசியா" என்ற கிரேக்க வார்த்தை "அழியாமை" என்று மூன்று முறைகள் மட்டுமே சரியாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அதை பவுலின் நிருபங்களில் மட்டுமே நாம் காணலாம். 1தீமோ 6:14-16) மேலும் 1கொரி 15:53,54 வசனங்களில் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு இரண்டுமுறை பயன்படுத்தப்படுகிறது. "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்." ஒரு கிறிஸ்தவன் "சாவாமையைத் தரித்துக்கொள்ளவேண்டும்" என்றால், அவன் முன்னதாகவே அழியாமையை அல்லது அழியா ஆத்துமாவைப் பெறவில்லை என்பது பொருள்படுகிறது. வேதாகமத்தில் சுமார் 800 முறைகள் "ஆத்துமா" என்ற வார்த்தை காணப்பட்டாலும் ஒரு முறைக்கூட அது "அழியாது" என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.

"கிங் ஜேம்ஸ்" மொழி பெயர்ப்பில் ஜனங்கள் திருப்தி அடைவதற்கு, மேலும் மூன்று வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. (அதில் அப்தார்சியா மற்றும் அப்தார்டோஸ் என்ற வார்த்தைகள் அழியாமை என்று மொழி பெயர்ப்பதற்குப் பதிலாக சாகாமை என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.) 1தீமோ 1:17 "நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ....... " என்று தேவன் புகழப்பட்டிருக்கிறார். வாசகர்களும் இதை ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் 11தீமோ 1:10 ம் வசனத்தில் "நம்முடைய இரட்சகராம் இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது, அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" என்று கூறப்பட்டுள்ளது. கடந்த இரண்டாயிரம் வருடமாக புறஜாதிகளின் மதங்கள் அழியா ஆத்துமாக்களைப்பற்றி உபதேசித்தபடி, இயேசு அழிவில்லா ஆத்துமாக்களுக்காக சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாரா ? நிச்சயமாக இல்லை. ஈடுபலியை கிறிஸ்து விலைக்கிரயமாக செலுத்துவதற்குமுன் கிறிஸ்தவர்களுக்கு அழியாமை என்ற நம்பிக்கையை தேவன் வெளிப்படுத்தவில்லை. நாம் வாசிப்பதுப்போல, "தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.." (ரோ 2:6,7) ஆகவே நன்மை செய்வதற்கு பரிசாக நித்திய ஜீவன் கொடுக்கப்படுகிறது. ஒருவர் அழியாமையை தேடுகிறார் என்றால், அவர் இந்நாள் வரைக்கும் அதை பெறவில்லை என்பது பொருள்படுகிறது. ஏனெனில், ஒருவரிடம் இருக்கக்கூடிய காரியத்தை ஏன் தேடவேண்டும்? ஆகவே, அழியாமையின் நம்பிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்ட கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆயினும், விழுந்துப்போன மனிதனின் பயம் அடிக்கடி விசுவாசத்தை மேற்கொண்டுவிடுகிறது. ஏனெனில், அபூரணமான மனிதன் ஜீவிக்கிற நிலையை விட்டுப் போவதற்கு மிகவும் அஞ்சுகிறான். "நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதி 3:4)என்று முதல் பொய்யைச் சொல்லி சாத்தான் அவர்களை வஞ்சித்தான். தேவனாலும் அழிக்கமுடியாத அழியா ஆத்துமாக்களைத் தேவன் சிருஷ்டித்தார் என்று இந்நாள் வரைக்கும் போதித்துக்கொண்டும் இருக்கிறான். இதன் விளைவாக நன்மை செய்தவர்கள் பரலோகத்தின் ஆசீரைப் பெறுவர், மீதியிருப்பவர்கள் நரகத்தில் நித்தியமான ஆக்கினையைப் பெறுவார்கள் என்று போதிக்கப்படுகிறது. நித்திய ஆக்கினை என்ற பயமுறுத்தலின் மூலம் சாத்தான் தேவனுடைய வார்த்தையை இருளாக்கி, மத உலகத்தை வஞ்சித்துக் கொண்டிருக்கிறான்.

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (11தீமோ 1:7) எந்த ஒரு போதனையாவது நம்முடைய இருதயத்திற்குள் பயத்தையும் திகிலையும் உருவாக்குகிறதோ, அவைகள் தேவனிடத்திலிருந்து வராமல் இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தானிடமிருந்து வந்ததா என்று மிகக்கவனமாக ஆராய்ந்துப்பார்க்க வேண்டும்.

நித்திய ஆக்கினை உண்மையில் நடக்கக்கூடிய ஒன்று என நம்முடைய நம்பிக்கையின் விளைவாக இருக்கும்பட்சத்தில், கிறிஸ்துவுக்குள்ளான குணலட்சணங்களில் வளர்ச்சியை அடுத்த இடத்தில் வைத்து, முதலில் நம்மால் முடிந்தவரைக்கும் அனைவரையும் இரட்சிக்கவேண்டும் என்று முயற்சிப்போம். யாருக்கு எப்படிப்பட்ட மகிமை கிடைக்கும் என்பதை உயிர்த்தெழுதலில் பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிடலாம். ஆனால் மரித்தோர், உயிர்த்தெழுதல் வரைக்கும் மரித்த நிலையில் இருந்தால், இப்போது இயேசுவின் குணலட்சணங்களில் வளர்ச்சி அடைவதற்கே முக்கியத்துவத்தைக் கொடுக்கவேண்டும். நாம் கிறிஸ்துவின் குணங்களில் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவரோடு இணைந்து பூமியில் உள்ள முழுக்குடும்பங்களையும் உயிர்த்தெழுப்பி ஆசீர்வதிக்கலாம். ஆகவே நாம் நம்முடைய பகைவர்களைக்கண்டு அஞ்சாமல், அவர்களுக்கு நன்மை செய்வதே இக்காலத்து முக்கியப் பணியாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

### கிறிஸ்தவ பலி

தத்தம் செய்த ஒரு கிறிஸ்தவன் தன்னையே பலி செலுத்துவதற்கு சட்டபடி ஏதேனும் கடமைகள் உள்ளதா ? ஆம், ஆனால் அவன் இந்த கடமையை மனவிருப்பத்தோடு தானாக ஏற்றுக்கொள்ளுகிறான். "பின்பு அவர் எல்லாரையும் நோக்கி - ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்." (லூக்க 9:23) பாவ நிவாரண பலியின் நாளின்போது, தேவனுக்கு முன்பாக மூன்று மிருகங்கள் கொண்டுவரப்பட்டது. (அதில் ஒன்று நிராகரிக்கப்படுகிறது) இளம் காளையை பிரதான ஆசாரியன் கொடுத்தாலும், அந்த இரண்டு ஆட்டுக்கடாக்களும் இஸ்ரயேல் புத்திரரின் மந்தையிலிருந்து எடுக்கப்படுகிறது. (லேவி 16 :3,5) பொதுவாக, காளை "பரிசுத்தமும், கபடற்றவரும் பாவமில்லாதவரும், பாவத்திலிருந்து விலகினவருமான" இயேசு கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது. (எபி 7 :26) இந்த ஒரு பலி செலுத்தப்படாவிட்டால் ஒருவரையும் தேவன் ஏற்றுக்கொள்ள வாய்ப்பில்லை. தங்களுடைய மரணம் வரைக்கும் விசுவாசத்தை நிரூபித்தவர்கள் தாங்கள் செய்த நன்மையின் பலனாக கிறிஸ்துவோடு இணைந்து இந்த முழுஉலகத்திற்கும் நன்மையை வருவிப்பார்கள். விசுவாசத்தில் நிலைத்திராதவர்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராகுவதற்கு வாய்ப்பை இழப்பார்கள். எபி 13:10-13ம் வசனங்களில் பவுல் இதை உறுதிப்படுத்திகிறார் - "நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனைசெய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை. ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்." இரண்டு ஆடுகளும் மரித்தாலும், பலி செலுத்தப்படும் ஆட்டிற்கு பாவ நிவிர்த்தி செய்வதில் பங்கு இருப்பதாகக் கருதப்படுகிறது.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை - பாவ நிவர்த்தியில் ஒரு பங்கைப் பெறுவதாக இருந்தால் இயேசுவின் பலியனால் ஏற்படும் பாவநிவர்த்திக்கான நன்மைகளை அது கூட்டுமா ? நிச்சயமாக இல்லை. 1, இயேசு கிறிஸ்து அனைவருக்காகவும் ஒரேமுறை மரித்தார். (எபி 7:27) ஈடுபலியின் கிரயம் முழுமையாக செலுத்தப்பட்டபின் அதோடு எதையாகிலும் சேர்க்கமுடியுமா? 2, நாம் செலுத்துவதற்கு நம்மிடத்தில் எந்த நன்மைகளும் இல்லையே - "நம்முடைய நீதிகள் அழுக்கான கந்தை (எசா 64 : 6) என்ற இரண்டு காரணங்கள் இதற்கு பதில் அளிக்கிறது.


இயேசுகிறிஸ்து ஆதாமுக்காக (அவருடைய அனைத்து சந்திக்கும்) கொடுக்கப்பட்ட ஈடுபலிக்கும், சபைக்கும் எந்த விதமான பங்கும் இல்லை. ஆனால் இவர்கள் கிறிஸ்துவோடு இணைந்து இந்த உலகத்திற்கான ஈடுபலியைக் கொடுத்து பாவங்களைத் தள்ளுபடி செய்வதில் பங்கைப் பெறுகிறார்கள். ஒரு இராஜா ஒன்றும் இல்லாத ஒரு ஏழையின் மகளைத் திருமணம் செய்து கொண்டு வருகிறார். அவள் திருமணத்தின்போது ஒன்றும் கொண்டுவருவதில்லை. ஆனால் திருமணத திற்குப்பின் இராஜாவோடு இணைந்து இராஜாவின் இராஜரீகமான பொக்கிஷங்களின் மேலும், இராஜ்யத்தின் மேலும் அவரோடு ஆட்சி செய்வதற்கும் உரிமை பெறுகிறாள். அதேபோல, மணவாட்டி இயேசு கிறிஸ்துவோடு இணைந்து ஆதாமையும், அவருடைய சந்ததியையும் மரித்த நிலையிலிருந்து உயிர்த்தெழுப்புவார்கள்.

நாம் விசுவாசிக்கக்கூடிய விளைவுகள் என்னவெனில், - ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய சொந்த விருப்பத்தை "தேவனுடைய சித்தம் செய்வதற்கு" பலிசெலுத்தி, "மரண பரியந்தம் விசுவாசமுள்ளவராக" இருக்கவேண்டும். பலிசெலுத்தப்படாமல், வனாந்தரத்திற்கு அனுப்பப்பட்ட ஆட்டை நாம் ஒருவரும் அடையாளப்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

### முடிவுரை

பரிபூரணநிலைக்கு மனுக்குலம் சீர்ப்பொருந்தப்பட்டு, நித்திய ஜீவனைப் பெறுவது, விதிமுறைகளுக்கு உட்பட்ட அழியாமை, கிறிஸ்துவ பலியைப்பற்றிய உபதேசங்களை நம்புவோர், மற்றவர்களைப் பயத்தினால் அல்ல அன்பினால் இழுத்து, ஆண்டவருக்காகவும், மற்றவர்களுக்காகவும், முழு விருப்பத்தோடு தங்களைத்தாங்களே பலி செலுத்த முன் வருவதற்கு ஊக்குவிக்கவேண்டும்.

வேதாகமத்தைக் குறித்தக்காரியங்களில் நம்முடைய புரிந்துகொள்ளுதலை சோதித்துப்பார்த்து - தேவைப்பட்டால், அவைகளை மறு ஆய்வு செய்து, செயல்முறை போதனைகளுக்கும் அறிவுக்குரிய கோட்பாடுகளுக்குள்ள வித்தியாசங்களை புரிந்து கொண்டு, அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.



பாகம் 3 : இன்னும் மற்ற பயனுள்ளபோதனைகள்

# தீர்க்கதரிசன உபதேசங்கள்

*அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு, பொழுது விடிந்துவிடி வெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும் - II பேதுரு 1:19*

நாம் சரியானக்காரியங்களைச் செய்வதற்கும், தவறானக்காரியங்களைச் செய்யாமல் இருப்பதற்கும் தீர்க்கதரிசன உபதேசங்கள் மிக அவசியமானதாக இருக்கிறது. எல்லா யுகங்களிலும் எல்லா தீர்க்கதரிசன உபதேசங்களும் தேவைப்படுகிறதில்லை. அந்தந்தக் காலத்தில் நிறைவேறக்கூடிய தீர்க்கதரிசனங்களைப பற்றிய உபதேசங்கள் அந்தந்தக் காலத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இதன் அடிப்படையில் அந்திக்கிறிஸ்து, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, இறுதி நாள், மற்றும் இஸ்ரயேல் கூட்டிச்சேர்த்தல் என்ற நான்கு தீர்க்கதரிசனங்களைப்பற்றி ஆராய்ந்துப் பார்க்கலாம்.

### அந்திகிறிஸ்து

அந்திக்கிறிஸ்துவின் தீர்க்கதரிசனங்களைப்பற்றி கத்தோலிக்கர்கள் மற்றும் புராட்டஸ்டண்டு மத வல்லுனர்களுக்கு வேறுபட்ட கண்ணோக்கங்கள் உள்ளது. சீர்த்திருத்துதலின் காலத்தில், புராட்டஸ்டண்டில் உள்ள ஒவ்வொரு பிரிவுகளும் ரோமாபுரியில் அமைக்கப்பட்ட போப் மார்க்கமே அந்திக்கிறிஸ்து என்று ஒத்துக்கொண்டனர். (வரலாற்றின் பார்வை) இக்னேஷியஸ் லயோலாவால் நிறுவப்பட்ட இயேசுவின் சபை குருக்கள் இரண்டு எதிரிடையான கருத்துக்களை முன் வைத்தார்கள். 1,அந்திக்கிறிஸ்து பரிசுத்த ரோமபேரரசுவுக்கு முன்னிருந்த மத நம்பிக்கையற்ற ரோமபேரரசு என்றும் (preterist view) 2, வருங்காலத்தில் யூத அந்திக்கிறிஸ்து என்று ஒருவன் எழும்பி எருசலேமிலுள்ள ஆலயத்தைக் கட்டுவான் என்றும் கூறினார்கள். (வருங்கால பார்வை) அந்திக்கிறிஸ்து - ரோமபேரரசில் உள்ள போப்மார்க்கம் என்ற கண்ணோட்டத்தை இரண்டு வாதங்களும் தவிர்க்கிறது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து சுயாதீனம் பெற்ற அனைத்து புராட்டஸ்டண்ட்டுகளும் மத நம்பிக்கையற்ற ரோமபேரரசு போப்மார்க்கம் என்று ஏற்றுக்கொண்டனர். அதேநேரத்திலிருந்து ஆவிக்குரிய புராட்டஸ்டண்டுகள் வருங்கால யூத அந்திக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

எல்லாவற்றிக்கும் மேலாக அந்திக்கிறிஸ்துவைப்பற்றி வசனங்கள் கூறும் முக்கியமானக் காரியங்கள் என்ன ? அந்திக்கிறிஸ்துவைப்பற்றி பவுல் எழுதிய சில வார்த்தைகளை வாசிக்கலாம். "அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே, அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது, ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான், அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக் காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்." ரோமராஜ்யத்தின் மத்தியிலிருந்து போப்மார்க்கம் எழும்பியது.

கிறிஸ்துவுக்குள் நிற்கும் பரிசுத்தவான்கள், இந்த தீர்க்கதரிசனங்களின் பொருளைக் கட்டாயமாக அறிந்துகொள்ள வேண்டியதாக இருந்தது. ஆனால் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் இவைகள் மிகவும் உதவியாக இருந்தது. "இதிலே ஞானம் விளங்கும், அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன். அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு." வேறு வார்த்தையில் சொல்லப்போனால், அந்த அமைப்பில் காணப்படும் பாவத்தின் அடையாளங்கள், தப்பறையான கொள்கைகள், அறுநூற்றறுபத்தாரைக் குறிக்கும் சகல துன்மார்க்கமான செயல்கள் போன்றக் காரியங்களின் இந்த அமைப்பை எளிதில் அடையாளம் காணலாம்.

பாழாக்கப்பட்ட இந்த அமைப்பை அடையாளப்படுத்துவதற்கு நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளையும் கவனிக்கலாம் - "மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது..." (மத் 24:15)

இதை தொடர்ந்துவரும் எச்சரிப்பையும் கவனியுங்கள் - "என் மகனனே, என் ஞானத்தைக் கவனித்து, என் புத்திக்கு உன் செவியைச் சாய்,

அப்பொழுது நீ விவேகத்தைப் பேணிக்கொள்வாய், உன் உதடுகள் அறிவைக் காத்துக்கொள்ளும். பரஸ்திரீயின் உதடுகள் (வெளி 17ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட வேசியான ஸ்திரீ) தேன்கூடுபோல் ஒழுகும். அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும். அவள் செய்கையின் முடிவோ எட்டியைப்போலக் கசப்பும், இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போல் கூர்மையுமாயிருக்கும் அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும், அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்போகும்." (நீதி 5:1-5) நவீன காலத்தில் அரசாங்கத்தையும், சபையையும் வேறுபடுத்தும்படி அநேக தேசங்கள் கோரிக்கை ஏறெடுக்கும் அளவுக்கு இருண்ட காலத்தின் பாவங்கள் மிகுதியாக இருந்தது.

நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று உறுதியாக தங்களைப்பற்றி சொல்லிக் கொள்பவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாக இருப்பதில்லை. இப்படிப்பட்ட வகுப்பினர்கள் வேதத்தைவிட்டு முற்றிலுமாக வேறுபடுகின்றனர். ஆகவே நாம் வேதத்தை தொடர்ந்து கீழ்படிய வேண்டும். ஏனெனில் வேதத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளும் மனிதனுடைய வார்த்தைகள் அல்ல, தேவனுடைய வார்த்தைகள்.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் சுவிசேஷ அறுவடை

கோதுமை மற்றும் களைகளைப் பற்றியும் நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் என்னவெனில் - "அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி - முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள், கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார். " (மத் 13:20) கோதுமை மணிகள் சேர்க்கப்படுவதற்கு முன் களைகளை அவர் எரிக்க சொல்லவில்லை. ஆனால் யூதயுக அறுவடை வரைக்கும் இரண்டையும் வளர்க்கவேண்டும் என்று கூறுகிறார்.

ஆயினும், கிறிஸ்து திரும்பி வந்தப்பின் ஒரு புதிய கட்டளைக் கொடுக்கப்பட்டது. "இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன், அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு - மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது, அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள், பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம்பண்ணினார்கள், பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச் செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான். பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன், அது என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார். " (வெளி 18:1-5)

சொல்லர்த்தமாக கிறிஸ்துவின் வருகை வரைக்கும் விசுவாசிகள் ஒருவராகிலும் போலி கிறிஸ்துவ அமைப்பிலிருந்து வெளியே வரக்கூடாது. ஆனால், கிறிஸ்து வந்தபின் அநேகர் வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அமைப்புகளை விட்டு பிரிந்துசெல்வதற்கு சில கிறிஸ்தவர்கள் அனுமதிக்கப்படுவதே இல்லை. ஏரியஸ் மத அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னும், விஷம் கொடுத்து கொல்லப்பட்டார். மார்டீன் லூத்தர் விரட்டப்பட்டார். தங்களுடைய விசுவாசத்தை இவர்கள் மறுதலிக்க வேண்டும் இல்லாவிட்டால் இந்த மத சமுதாயத்தை விட்டு வெளியேற வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஏற்றுக்கொண்டவர்கள். அவர்கள் இருந்த கிறிஸ்துவ அமைப்பில் இருக்கும்படி ஊக்குவிக்கப்பட்டார்கள்.

கிறிஸ்துவின் வருகை இனிமேல் சம்பவிக்கக்கூடிய ஒரு சம்பவம் என்று நாம் நம்பினால், மனித சட்டங்களையும், ஒழுங்கையும் மையமாகக் கொண்டிருக்கும் அமைப்புகளின் கோட்பாடுகளையும், கற்பனைகளையும் மற்றவர்களுக்கு பிரசங்கித்து, நாம் இருக்கும் அமைப்பைப் பெரிதாக்க உழைக்கவேண்டும். ஆனால் கிறிஸ்து வந்துவிட்டார் என்றும், சுவிசேஷயுக அறுவடையில் இருக்கிறோம் என்றும் நம்பினால், நாம் இருக்கும் பிரிவுகளிலிருந்து (மனிதனால் ஏற்படுத்திய சட்டம், கோட்பாடுகள், ஒழுங்கு ) நாமே மனப்பூர்வமாக வெளியேற வேண்டும். நாம் இருக்கக்கூடிய பிரிவின் கோட்பாடுகளோடு நம்மால் ஒத்துப்போக முடிந்தால், அதாவது நம்முடைய விசாசத்திற்கு முரண்பாடாக இல்லாவிட்டால் கிறிஸ்து இன்னும் வரவில்லை என்று பொருள்படும். ஆனால் இந்த சபைஅமைப்பின் கோட்பாடுகளோடு நம்முடைய விசுவாசம் இசைந்து போவதற்கு வாய்ப்பில்லை என்றும், கிறிஸ்து வந்து விட்டார் என்பதையும் உறுதிப்படுத்திகொள்ளும் அடையாளமாக இருக்கிறது. மேலும் அதைவிட்டு வெளியேற அழைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் நாம் அறிந்துகொள்ளலாம்.

கத்தோலிக்கமும், மற்ற சுவிசேஷம் அறிவிக்கக்கூடிய சபைகளும் போதிக்கக்கூடிய மத போதனைகளில் கிறிஸ்துவ குணலட்சணங்கள்பற்றி

போதித்துக் கொண்டிருப்பதை அநேகர் கவனித்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு மிகப்பெரிய அமைப்புகளும் விதிவிலக்கல்ல. இந்நாளில் சிறிய அமைப்புகளும் இது பிரபலமாகிக் கொண்டுவருகிறது. ஆகவே நாம் வெளியேறுவதற்கு கிறிஸ்து, கண்ணுக்குப் புலப்படாமல் ("இரவில் திருடன் வருகிற விதமாக" - IIதெச 5:2) வந்திருக்கிறார் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்வது அவசியம். ஆனால் பிரிவுகளைவிட்டு வெளியேறினாலும், அவர்களுடைய நட்பை குறைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**கடைசி நாள்**

கடைசி நாள் மற்றும் கடைசி நாட்கள் பற்றி அநேக வசனங்கள் உள்ளது. (இவைகள் பரிமாற்றங்கள் செய்யமுடியாத வார்த்தைகள்) இவைகளின் அஸ்திபாரம் எரிகோவின் கடைசி நாட்களில் நடந்த சம்பவத்தில் காணப்படுகிறது. அங்கு யோசுவாவும், இஸ்ரயேலர்களும் எக்காளம் ஊதும் ஏழு ஆசாரியர்களோடு அந்த பட்டணத்தை ஏழு நாள் சுற்றி வந்தார்கள். ஆறு நாள் ஒவ்வொரு சுற்றும், ஏழாம் நாள் ஏழு முறை சுற்றி வந்தனர். எரிகோவின் கடைசி ஏழு நாட்கள் சுவிசேஷ யுகத்தில் உள்ள "ஏழு நாட்களை" அடையாளப்படுத்துகிறது. வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட ஏழு சபையின் தூதர்களைப் பற்றியும், அவர்கள் அந்தந்த சபைக்கு அளித்த செய்திகளைப் பற்றியும் புரிந்துகொள்ள இது உதவுகிறது. அதேபோல, எரிகோவைச் சுற்றி ஏழு முறை வந்த அந்த கடைசி நாள் - சுவிசேஷ யுகத்தில் உள்ள "கடைசி நாளும்" ஏழாவது கடைசி வாதை வரைக்கும் ஏழு பாகங்களாகப் பிரிக்கப்படுவதைக் காட்டுகிறது.

சில நேரங்களில் "கடைசி நாட்கள்" என்ற வார்த்தை சுவிசேஷ யுகத்தில் பிரிக்கப்பட்ட ஏழு பாகங்களையும் முழுமையாகக் குறிக்கிறது. சில நேரங்களில் அதில் ஏதோ ஒரு பாகத்தையும் குறிப்பிடுகிறது. (யாக்கோபு 5:3, IIபேது 3:3) "மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக." (IIதீமோ 3:1) என்ற வசனம், அப்போஸ்தலர் 2:18ம் வசனத்தில் முழுமையான சுவிசேஷ யுகத்தைப்பற்றி சொல்கிற அந்த "கடைசி நாட்கள்" பற்றி குறிப்பிடுகிறது. இந்த இரண்டு வசனங்களிலும் சொல்லப்படுகிற "கடைசி நாள்" ஆயிரவருட ஆட்சியிலும் நீடித்திருக்கும் என்பது தெளிவாகிறது. ஏனெனில் அதற்கு முந்தைய வசனம் கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் நடப்பதைக் குறித்துப் பேசுகிறது.

விசுவாசமுள்ள சபையின் உயிர்த்தெழுதலுக்கும் "கடைசி நாள்" சம்மந்தமுடையதாக இருக்கிறது. "கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்" (யோவா 6:39,40,44,54) ஆகவே "கடைசி நாள்" கிறிஸ்துவின் இராஜ்யத்திலும் நீடித்திருக்கும். (யோவா 11:24, 12:48) "உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் (லாசரு) உயிர்த்தெழுந்திருப்பான் என்று...." மேலும்" நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.." என்று இயேசு சொன்ன வசனங்கள் இதை உறுதிப்படுத்துகிறது. இப்படியாக, "கடைசி நாள்" - முழு சுவிசேஷயுகத்தையோ அல்லது சுவிசேஷயுகத்தில் கடைசி பாகத்தையோ குறிக்கலாம்.

இந்த "கடைசி நாள்" உலகத்தின் ஏழு முக்கியமான சம்பவங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதே. நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. சில சம்பவங்கள் மற்றவைகளைவிட சற்று கூடுதலான காலத்தைக் கொண்டிருக்கிறது. இவைகள் மாம்ச இஸ்ரயேலில் சம்பவித்துக் கொண்டிருப்பவைகள் என்று நாம் கருதுகிறோம். 1. சீயோன் இயக்கம் 2, முதலாம் உலகப் போர் மற்றும் பால்பர் பிரகடனம் 3. ஜெர்மானிய நாஜீக் படைகளின் துன்புறுத்தல் 4,இரண்டாம் உலகப் போர் மற்றும் மத்திய ஐரோப்பாவிலிருந்து பயணம். 5,ரஷ்யா நாட்டின் எழுச்சியும், வீழ்ச்சியும் மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து பயணம். அதற்குபின் நடக்கக்கூடிய ஆறாம் சம்பவம் - மேற்கிலிருந்து யூதர்கள் வலுக்கட்டாயமாக அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிறிஸ்துவின் பகிரங்கமான ஆட்சிக்கு முன் நடக்கும் அர்மகெதோனாகும். (எசேக்கியேல் 38 மற்றும் 39ம் அதிகாரங்களில்) இங்கு சொல்லப்பட்ட ஒவ்வொரு சம்பவங்களும், தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படியாக, இஸ்ரயேல் கூட்டிச்சேர்க்கப்பட்டு, அனைவரும் தங்களுடைய சொந்த தேசத்திற்குத் திரும்பி, தங்களுடைய முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, தாவீது, தானியேல் மற்றும் பலர் உயிர்த்தெழுதலுக்காக தங்களுடைய தேசத்தை ஆயத்தப்படுத்துவார்கள். அதற்குபின் இஸ்ரயேல் ஜனங்களும், அதற்குபின் உலக ஜனங்களும் உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள்.

அதேநேரத்தில், இந்த உலகத்தின் சம்பவங்கள், கிறிஸ்துவ மத அமைப்புகளின் வல்லமைகளை அழிக்கக்கூடியதாகவும் செயல்பட்டுக் கொண்டிருக கிறது.

தேவன் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், நம்முடைய விசுவாசம் உறுதிப்படுவதற்கும், நாம் அவருடைய சித்தத்தை எப்படி செய்யவேண்டும் என்று உணர்த்துவதற்கும் இப்போது. தோன்றும் புதிய குழப்பமான ஒழுக்கமற்ற நிலையை எவ்வாறாக பயன்படுத்துவார் என்பதை நாம் இப்போது காணலாம். அவர் என்ன செய்கிறார் என்பதை அறிந்துகொண்டால் நாம் எளிதில் அவருக்குப் பின்செல்லலாம்.

## இஸ்ரயேல் நாடு திரும்புதல்

மேசியாவின் தீர்க்கதரிசனங்களைக் காட்டிலும், தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கும் வாக்களித்த இஸ்ரயேல் தேசத்திற்கு, கூட்டிச்சேர்ப்பதைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள மிக அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. "கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள்மேல் இரம்மியமாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம்பண்ணவும் இரம்மியமாயிருப்பார், நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப் போடப்படுவீர்கள். கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார், அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச்சேவிப்பாய். அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராதது, அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார்." (உபா 28:63-65) என்று மோசே கீழ்ப்படியாத இஸ்ரயேலுக்கு அறிவித்தார். ஆனால் "உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார். உன்னுடையவர்கள் வானத்தின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டுவந்து, உன் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு, உன்தேவனாகிய கர்த்தர் அதில் உன்னைச் சேர்த்து, உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப்பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்." என்றும் வாக்களித்தார்.

"அந்நாளிலே .... என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பைத் திருப்புவேன், அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன், நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார். " ( ஆமோஸ் 9:11-15) என்று மேலும் தேவனுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்துகிறார். 1878 பெட்டா டிக்குவா (நம்பிக்கையின் வாசல்) பட்டணத்தை அடிக்கல் நாட்டினது முதல் இஸ்ரயேலர்கள் தங்கள் தேசத்தில் குடியேறிவிட்டார்கள். அவர்களை இனி ஒருவராலும் விரட்ட முடியாது என்று நாம் உறுதியளிக்கலாம்.

ஆகவே இந்த உலகத்தாரின் கணிப்பு யூதர்களுக்கும், இஸ்ரயேலர்களுக்கும் எதிராக திரும்பிக் கொண்டிருப்பதில் நமக்கு எந்த பங்கும் இல்லை. அதற்குப்பதிலாக காலங்கள் இன்னும் சாதகமாக இருப்பதால், எபிரெய மொழிகளை கற்றுக்கொண்டு அவர்கள் தங்களுடைய நாட்டிற்கு திரும்பும்படி நாம் நம்முடைய யூத நண்பர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும். ஏனெனில் இனி சம்பவிக்கக்கூடிய காரியங்களுக்கு அவர்கள் தங்களுடைய தேசத்தில் மட்டுமே பாதுகாப்பாக இருக்கமுடியும். எல்லாவற்றிற்கும்மேல் அவர்கள் தேவன் வாக்களித்த தேசத்திற்குத் திரும்பினால் தேவனுடைய இரக்கத்தையும் அவர்கள் பெறுவார்கள்.

ஒருவர், இஸ்ரயேல் கூட்டிசேர்த்தலைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை அறியாதிருந்தால் அவர்கள் அந்திக்கிறிஸ்து அல்லது யூதர்களுக்கு எதிரானவர்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. ஆனால் வரக்கூடிய மிகக்கொடிய பிரச்சனைகளின் மத்தியில், தேவனுக்குமுன் நீதியாக எப்படி நடந்துக்கொள்ள முடியும் என்பதை உணர்ந்துக்கொள்ள இந்த தீர்க்கதரிசனங்கள் மிகப்பயனுள்ளதாக இருக்கும்.


### கட்டளைகள் அல்ல, பயனுள்ள உபதேசங்கள்

"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான் களாயிருப்பீர்கள். "(யோவ 13:17)

அந்திக்கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று பறைசாற்றி கொள்பவர்களுக்கும், உண்மையான கிறிஸ்தவ விசுவாசத்தை நடைமுறைப்படுத்துபவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை உபதேசிக்கிறது. நாம் இருக்கக்கூடிய அமைப்புகளை சுத்திகரிப்பதை விட்டுவிட்டு மனிதர்களால் ஏற்பட்ட கொள்கைகளையும், சட்டங்களையும் விட்டு வெளிவரவேண்டும் என்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நமக்கு செய்கைக் காட்டுகிறது. நம்முடைய ஆண்டவர் என்னசெய்கிறார் என்று அறிந்துகொள்வதற்கும் அவரைப் பின்தொடரு வதற்கும் "கடைசி நாள்" தீர்க்கதிரிசனங்கள் நமக்கு உதவுகிறது. யூதர்களுக்கு எதிரான உணர்வுகளைத் தவிர்த்து, நம்முடைய யூத நண்பர்களை மீண்டும் இஸ்ரயேலுக்கு நாடுதிரும்பும்படி ஊக்குவிக்கலாம்.

இப்படியாக, தெரிந்துகொள்ளப்பட்ட பலர் அநேக நூற்றாண்டுகளாக செய்த காரியங்களில் நமக்குக் கிடைத்துள்ள வெவ்வேறு விதமான எச்சரிப்புகளைக் கவனிப்பது மிகவும் ஞானமாக இருக்கும்.

உத்தேசங்கள் அல்லது நோக்கங்களின் ஆய்வு



# விசுவாச அறிக்கைகள் மற்றும் வேத படிப்பு

*நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது.. - உன்னதப்பாட்டு 8:6*

ஒருவர் மற்றொருவருடைய குணங்களை எவ்வாறு மதிப்பிடுவது ? "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்..." (யோவ 13:35) என்று நம்முடைய ஆண்டவராம் இயேசு எளிதாக பதில் அளிக்கிறார்.

ஆயினும், அன்பு சந்தோஷம், நீடிய பொறுமை, இரக்கம் ... போன்றவைகள் நம்மிடத்தில் உள்ளதா, இல்லையா என்று வெறுமையாக சொல்லமுடியாது. இவைகள் அளவிடப்படுகிறது. ஆனால் விசுவாச அறிக்கைளைப் பொருத்தவரையில், மிக எளிமையாக ஆம் / இல்லை என்று பதில் அளித்துவிடலாம். மேலும் இந்த விசாவாச அறிக்கைகளை "போதனைகளின் நிலைகள்" என்றும் அல்லது இதற்கு ஒப்பாகவும் எதையும் சொல்லலாம். போதனைகளின் நிலைகளை வகைப்படுத்துவதின் மூலம் நாம் விசுவாசபிரமாணங்களை உருவாக்குகிறோம். இதனிமித்தம் நாமும், நம்மை சார்ந்தவர்களுக்கும் மற்றவர்களுக்குள்ள வித்தியாசத்தை அறிந்துகொண்டு, நம்மை சேராதவர்களை தவிர்த்துவிடலாம். நம்மோடு இசைவாக உள்ளவர்களை, இப்படிப்பட்ட போதனையின் தரம் அடையாளம் கண்டுகொள்ள உதவுகிறது. மேலும் நம்முடைய கருத்துக்களுக்கு வித்தியசப்படுபவர்களை இதன் அடிப்படையில் எளிதில் குற்றப்படுத்தி ஒதுக்கிவிடலாம்.

ஒருவர் என்னை காட்டிலும் அதிக மேன்மையுள்ளவராக ஜீவத்தால், நான் அதை எப்படி சரிக்கட்டுவது என்று விழுந்துபோன மனித இயல்பு தவிக்கிறது. அவர் விசுவாசிக்கும் விஷயத்தில் ஏதோ ஒரு குற்றத்தை என்னால் கண்டுபிடிக்க முடியும். (அதைக்குறித்து நான் என் சிந்தையை மாற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் சரி) அவர் நம்பக்கூடிய காரியங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய அவசியம் இல்லாதப்போதிலும், அதை ஒரு போதனையாகப் பாவித்து, அதை முடிந்தவரையில் நடைமுறைப்படுத்துவேன். அதற்குபின் அவருடைய நல்ல குணங்களை என்னுடன் ஒப்பிடுகையில் அவர் சற்று குறைவாகக் காணப்படுவார்.

சீஷருக்கு எதிராக தன்னை ஒரு இராஜாவாக ஏற்படுத்திக்கொண்டார் என்று ரோமர்கள் இயேசு கிறிஸ்துவை குற்றம் சாட்ட முடியாமல் போனாலும், அவர் ஒரு மாயவித்தைக்காரர் (வியாதிகளை குணப்படுத்தியதால்) என்றும் ஒழுக்கக்கேட்டை போதிப்பவர் என்றும் யூதர்களால் குற்றம் சாட்டமுடிந்தது. ஏனெனில் இந்த இருகாரியமும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் படி மரணத்திற்கு ஏதுவான குற்றமாகக் கருதப்பட்டது. (ஆனால் ரோம அரசாங்கத்தின் சட்டத்தில் இவ்விரண்டுமே குற்றமாக எண்ணப்படவில்லை) சாந்தமான வயது சென்ற மூப்பர் ஏரியஸ் கிபி 313ல் , உலக அளவில் பரவியிருந்த ஒரு அடிப்படையான தவறை சுத்திகரிப்பதற்கு அலக்சாந்திரியா சபையில் கெஞ்சி மன்றாடினார். ஆனால் ஐசுவரியமுள்ள அந்த வாலிபன் அத்தேனேசியஸ், அவரை முழுமையாகக் குற்றப்படுத்த முடியவில்லை. இந்த ஏரியஸ்கு விரோதமாக ஒரு மதரீதியான ஒரு குற்றத்தை சாட்ட ஐந்து வருடங்கள் ஆயின. இப்போதும் ரோம சபையின் குருக்கள் மாட்டின் லூத்தரை குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். (எந்த காரணமுமின்றி கிபி 1525ம் வருடம் அவருடைய திருமணத்தை அங்கீகரியாமல் போனார்கள்) முறைதவறி பிறந்த பிள்ளைகள் அநேகர் இருந்தாகவும், காரணம் காட்டினார். மேலும் மத கருத்துகளின் மாறுபாடுகள் இருந்தது. ஒவ்வொரு சம்பவங்களிலும் குற்றம் சாட்டியவர்களின் தவறுகளை விட்டு கவனத்தைத் திருப்பியது.

**தேவனுடைய வார்த்தை நமக்கு என்ன சொல்கிறது?**

ஒரு கிறிஸ்தவனாக தகுதி பெறுவதற்கு வேதம் சில அறிவுப்பூர்வமான போதனைகளைக் கொடுக்கிறது. ஆனால் இவைகள் மிகவும் குறைவு. அதில் பாதியை யோவான் தன்னுடைய நிருபங்களில் கொடுத்திருக்கிறார். (அறிவுப்பூர்வமான போதனைகளைக் காட்டிலும் செயலாற்றக்கூடிய போதனைகளை வேதம் அதிகம் கொடுக்கிறது. )

ஒரு கிறிஸ்தவன் -

* தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். - எபி 11:6

*இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கவேண்டும் - மத் 10:32,33, 1யோவ 4:15,5:5

*இயேசு மாம்சத்தில் வந்தார் என்பதை விசுவாசிக்கவேண்டும் - 11யோவ 7, 1யோவ 4:2,3

* இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கவேண்டும் -1யோவ 2:22, 5:1


* கிறிஸ்தவர்கள் மோசேயின் பிரமாணத்திற்கு உள்ளானவர்கள் அல்லவென்பதை விசுவாசிக்கவேண்டும். - கலா 5:4

* உயிர்த்தெழுதல் நடந்தவரலாறு அல்ல என்று விசுவாசிக்கவேண்டும். - 11தீமோ 2:16-18

அநேக கிறிஸ்தவர்கள், அறிவுப்பூர்வமான போதனைகள் குறைவாக இருப்பதால், அதிருப்தி அடைந்துள்ளனர். எடுத்துக்காட்டாக - "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார். அவனும் தேவனில் நிலைத்திருக்கிறார். (1யோவா 4:15) என்று வாசிப்பவர், "இயேசுவே தேவன்" என்பதை யோவான் கூறுகிறார் என்று நிச்சயமாக நினைத்துக் கொள்ளுவார்கள்.

சரியான காரியங்கைக் கற்றுகொண்டு செய்யவேண்டும், ஆனால் உள்ளார்ந்த அன்போடிருக்கவேண்டும். லோத்து சோதோமை விட்டு வரும்படி அழைக்கப்பட்டார். சோதோமில் அவர் தரித்திருந்தால் அவர் மரித்திருப்பார். அதேபோல் நாமும் இன்று சமயகட்சி மனப்பான்மையை விட்டு வெளியேறவேண்டும். ஏனெனில், ஒருவர் நல்ல முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு, அழைக்கப்பட்ட அழைப்பை உணராமல் இருந்தால், அவரை ஒரு எதிரியைப்போல பாவிக்கக்கூடாது. ஏனெனில், எரிகோ பட்டணத்தில் உள்ள அனைவரும் தேனுடைய ஜனங்களுக்கு எதிராளிகளாக இருக்கவில்லையே.

போதனைகளின் தரங்கள் நமக்குள் நடக்கவேண்டிய நன்மையான மாற்றங்களைத் தடுத்துவிட நாம் அனுமதிக்கலாகாது. நாம் வேதாகமத்தையும், அதன் போதனைகளையும் படித்து, நம்மை நாம் சரியாக மாற்றிக் கொள்ளவேண்டும்.



ஹெரால்டு மற்றும் அதன் இறைப்பணி

# வசனங்கள் தெளிவாக நமக்கு போதிப்பது

*நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது.. - உன்னதப்பாட்டு 8:6*

சுமார் தொன்னூறு வருடங்களுக்கு மேலாக "வசனங்கள் தெளிவாக நமக்கு போதிக்கிறது" என்பதை இந்த பிரதி வெளியிட்டுவருகிறது. இது நம்முடைய தொடர்ச்சியான விசுவாசமும், இறைபணியுமாக இருக்கிறது. பொறுமையின் ஆவியோடும், மற்ற அனைவரையும் குறித்த நல்ல நோக்கத்தோடும் நாம் எந்தவிதமான விசுவாச அறிக்கைளையும் மற்றவர்கள் மேல் வலுக்கட்டாயமாக தினிப்பதில்லை. நம்முடைய நம்பிக்கையை, விசுவாசமுள்ள சபைக்கும் மீதியிருக்கும் உலகத்தாருக்கும் அறிவிக்கிறோம்.

ஒரு கிறிஸ்தவனாக அடையாளம் கண்டுகொள்வதற்கு தேவைப்படுகிற வேதத்தின் நம்பிக்கைகளைக் குறித்து இந்த ஹெரால்டு பிரதி சம்பாஷிக்கிறது. அநேக காரியங்கள் உண்மையாக இருப்பினும், வேதாகமம் அவைகளை அடிப்படை கோட்பாடுகளாக கருதுவதில்லை. முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாகிய உண்மையான சபைக்கு உதவுவதே இந்த பிரதியின் முதன்மையான நோக்கமாக இருக்கிறது. அதற்குபின் வேதாகமத்தின் நம்பிக்கையை, மீதியிருக்கும் இந்த உலகத்திற்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

* சபை "ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம்". இந்த சுவிசேஷயுகம் முழுவதும் இந்த ஆலயம் கட்டப்பட்டு வருகிறது. ஆசாரியத்துவம் நிறைவடைந்தப்பின் இயேசுகிறிஸ்து மற்றும் அவருடைய சபையும் இஸ்ரயேலை **ஆசீர்வதிக்க துவங்குவார்கள்.**

*மேலும் பூமியில் உள்ள மற்ற குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார்கள்.

*சபையின் குணலட்சணங்களின் வளர்ச்சி - இறுதி நபர் முழுமையாக பயற்சி பெற்று விசுவாசத்தில் பூரணப்படும் வரையில் உடன்படிக்கை செய்த விசுவாசிகள் தங்களுடைய பாவத்திற்குரிய மன்னிப்பை கிறிஸ்துவின் ஈடுபலியின் நன்மையின் மூலம் தொடர்ந்து பெற்றுக் கொள்ளவேண்டும். குணலட்சனங்களில் வளர்ச்சி அடைவது மிகக் கடினமாக இருப்பினும் அதன் பலன் மிகுதியாக இருக்கும்.

*இயேசு கிறிஸ்து தன்னையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, இவ்விதமாக, ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்த தினால், சபைக்கும் இந்த உலகத்திற்கும் நம்பிக்கை கிடைத்தது. "அனைவருக்கும் ஈடுபலி" கொடுத்த இயேசுவை, கிறிஸ்துவின் ராஜ்யத்தில் இந்த உலகம் நன்கு கற்றறிந்து கொள்ளும்.

*தன்னுடைய மணவாளனைப்போல ஆவிக்குரிய அழியா சரீரத்தோடு"தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே சபையின் நம்பிக்கையாக இருக்கிறது.

நித்தியமான ஓய்வுக்காக பரிசுத்தவான்கள் பூரணப்படுத்தபடாமல், இந்த பூமியில் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் முழு உலகத்தையும் தேவனோடு கூட ஒப்புரவாக்கும் மிகப்பெரிய வேலைக்காக பூரணப்படுத்தப்படுகிறார்கள். (இதற்கு ஆயத்தமாக உலகத்தில் சிதறியிருந்த யூதர்கள், தேவன் ஆபிரகாம், ஈசாக்கு அதற்குபின் யாக்கோபுக்கு வாக்களித்த தேசமாகிய இஸ்ரயேலில் கூட்டிச் சேர்க்கப்பட்டுவிட்டார்கள்.

*கிறிஸ்துவின் ஆயிர வருட இராஜ்யத்தில் நடைப்பெறும் உயிர்த்தெழுதலையும் அதற்குபின் நீதியில் நடந்து மனித பூரணத்துவத்தை பெற்றுக் கொள்வதிலும் இந்த முழுமனுக்குலத்தின் நம்பிக்கை சார்ந்துள்ளது.

ஆசரியத்துவம் இரண்டு முக்கிய கடமைகளை கொண்டுள்ளது. 1, பலிசெலுத்துதல் 2, கற்பித்தல் மற்றும் ஆசீர்வதித்தல். முன்னதாக பலி செலுத்தப்பட்டப்பின் ஆசீர்வாதங்கள் வரும் என்றும் லேவி 9ம் அதிகாரம் நமக்கு காட்டுகிறது. இதுவே லேவியர்கள் வழிவந்த ஆசாரியர்களுக்கும் கிறிஸ்து மற்றும் சபையின் ஆசாரியத்துவத்திற்கும் உண்டான வழிமுறைகள்.

ஆதாமுக்குள் நாம் அனைவரும் பிறந்திருக்க, **இந்த ஆதாமின் பாவத்திற்காக** அங்கீகரிக்கப்பட்ட பலியை இயேசுகிறிஸ்துவால் மட்டுமே கொடுக்க முடியும். "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக் கப்படுவார்கள். ...." (ரோம 5:18,19 1கொரி 15:21,22)

ஆனால் இந்த ஆசாரியத்துவம் ஜனங்களை ஆசீர்வதிக்கவில்லை என்றால், இயேசுவின் பலி பயனற்றுவிடும். வரக்கூடிய யுகங்களில் இந்த முழு மனுக்குலத்தை இயேசுவோடு இணைந்து ஆசிர்வதிப்பதற்கு, ஒவ்வொரு கிறிஸ்தவனும், பகைவரையும் நேசிக்கக்கூடிய அன்பை இப்போதே கற்றுக் கொள்ளவேண்டும்.

### தீர்க்கதரிசனத்தில் இன்று

# மாறிக்கொண்டிருக்கும் பெண்ணின் பணி

*தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் - ஆதி 1:27*

2010ம் வருட துவக்கத்தில், அமெரிக்காவின் பெரும்பாலான வேலைகளில் பெண்கள் ஈடுபட்டார்கள். சமீபத்தில் எட்டு மில்லியனில், முக்கால் பாகம் வேலைகளை ஆண்கள் இழந்திருக்கிறார்கள். இந்த காரியம். பெண்களின் ஆதிக்கத்தைப் பல வருடங்களாக அதிகரித்துக் கொண்டு வருகிறது. 1980ம் வருடம் 26% நிர்வாகப் பொறுப்புகளையும், தொழில் சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளிலும் ஈடுபட்டிருந்த பெண்களின் சதவீதம் இப்போது 51%ஆக உயர்ந்திருக்கிறது.

162 நாடுகளில், பொருளாதாரம் மற்றும் அரசியல் வல்லமையில், பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பு, பெண்களின் வளர்ச்சியை அளவிட்டது. சில நாடுகளைத்தவிர பெரும்பாலான நாடுகளில் பொருளாதார வெற்றிகளுக்குப் பெண்களே காரணமாக இருந்தனர். தேசத்தின் லஞ்ச ஊழல் மற்றும் வறுமையின் நீண்டகால போராட்டங்களுக்குப் பின், லிபிராவின் ஜனாதிபதியாக, எலன் ஜான்சன் செர்லீப் 2005ம் வருடம் தேர்வு செய்யப்பட்டார். கடந்த வருடம் ஐஸ்லாந்தில் முதல் பெண் பிரதமர் தேர்வு செய்யப்பட்டார். தொடர்ச்சியான வருடங்களில், வாண்டாவில் ஏற்பட்ட ஓரின படுகொலையை அடுத்து அத்தேசம், அதின் பாராளுமன்ற உறுப்பினர்களாக, பெண்கள். அதிக இடங்களைப் பெற்ற முதல் நாடாக விளங்கியது.

உலக வரலாற்றில், தென்கொரியா, ஆண் ஆதிக்கம் கொண்ட சமுதாயத்தைக் கொண்டிருந்தது. ஆண் பிள்ளைகளை பெறாத பெண்கள் கணவர்களால் வையப்பட்டு, வெளியேற்றப்பட்டனர். ஆனால் கடந்த 1970 - 1980 வருடங்களில் அந்நாட்டின் அரசாங்கம் ஒரு இயந்திர புரட்சியைத்தழுவி, வேலை செய்வதற்கு பெண்களை ஊக்குவித்து. பெண்கள் நகரத்திற்குள் பிரவேசித்து, கல்வி கற்றப்பின், கொரியாவின் சமுதாயத்தில் வழிவழியாகவந்த பாரம்பரியம் தள்ளாடிக் கவிழ்ந்தது. 1990ல் தென்கொரியா தன்னுடைய சட்டங்களைமாற்றி. பெண்களுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் தேவையான பாதுகாப்பைக் கொடுத்து, அவர்களின் பிள்ளைகளைத் தாங்களே பதிவு செய்வதற்கு உத்தரவிட்டது. தென் கொரியாவில் நடந்தக் காரியங்கள் இப்போது சீனாவிலும், இந்தியாவிலும் நடந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மொத்தத்தில் இந்த உலகில், கல்வி அறிவிலும், அரசியல் வல்லமையிலும் வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கும் பெண்கள் - சமுதாயத்தில் மிக முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள் -

* அமெரிக்காவில் கல்லூரிகளும், பள்ளிகளும் பெண்களின் ஆதிக்கத்திலேயே உள்ளது. 2012ல் கல்லூரிகளில் ஆண்களைவிட 50% பெண்கள் இளங்கலைஞர் என்னும் பல்கலைக்கழகம் பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

*இப்போது, கல்வி நிபுணர் பட்டங்களில் 60% , மருத்துவத்திலும், சட்டப்பயிற்சியிலும் 50% பெண்களே தேர்ச்சிப்பெற்றிருக்கிறார்கள்.

* சீனாவில் 40% பெண்கள் தனிப்பட்ட தொழிலில் ஈடுபட்டுளனர்.

*இந்தியாவிலுள்ள பெண்கள் ஆண்களைவிட மிகவேகமாக ஆங்கிலம் கற்றுக்கொள்வதினால் . அநேக வேலைகளில் (global call centers) துரிதமாக அமர்த்தப்படுகிறார்கள்.

முதன்முறையாக அமெரிக்காவில் 30-44 வயதுள்ள ஆண்களைவிட பெண்கள் அதிகமாகக் கல்லூரிப்பட்டங்களைப் பெற்றுள்ளனர். இதன் விளைவாக வருமானம் வரும் வழிகள் அநேக மாற்றங்களைக் கண்டுள்ளது. 1970ம் வருடத்தில் பெண்கள் 2% -6% வரைக்கும் தங்களுடைய வருமானத்தில் குடும்பத்தைத் தாங்கினார்கள். இன்றைக்கு 42 % குடும்ப வருமானத்தை சம்பாதிப்பவர்களும், பத்தில் நான்கு தாய்மார்கள் வீட்டில் தங்களுடைய குடும்பத்தினருக்கு உதவியாக சிறுதொழில் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். இப்போது. திருமணம் செய்து கொள்ளாமல், வேலைகளைச் செய்வதற்கு அநேக பெண்கள் முடிவெடுத்துள்ளனர். இவர்களின்

எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. 1970ல் 16% பெண்கள் திருமணம் செய்யாதிருந்தார்கள், இன்று அது 40% ஆக அதிகரித்துள்ளது.

**பெண்களின் ஆதிக்கம்**

மனிதன் தனிமையாய் இருப்பது அபூரணமாக இருப்பதை தேவன் கண்டு ஆதாமின் எலும்பிலிருந்து ஒரு பெண்ணை சிருஷ்டித்தார் என்று தேவனுடைய படைப்பின் காரியங்கள் நமக்கு அறிவிக்கிறது. தேவன் அவளை அந்த மனுஷனிடத்தில் ( எபிரேய சொல் - இஷ்) கொண்டுவந்தார். ஆதாம் அவளுக்கு மனுஷி (எபிரெய சொல் - இஷ்ஷா) என்று பெயரிட்டார். இந்த வார்த்தை, தாய்மையின் வல்லமையை குறிப்பிடக்கூடிய வார்த்தையாக மாத்திரம் பயன்படுத்தப்படவில்லை. ஏதேனிலிருந்து வெளிவந்த பின் "ஜீவனுள்ளோருக்கு தாயானவளாக" இருக்கப்போகிறாள் என்பதைக் குறிப்பிடும்படி ஆதாம் மனுஷியை ஏவாள் என்று அழைத்தார். (ஆதி 3:20) சிருஷ்டிப்பின்போது இருவரும் ஒருவராகக் காணப்பட்டார்கள். "அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து அவர்களைச் சிருஷ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார்." (ஆதி 5:2) ஆகவே மனுஷி மனுஷனைப் பூரணப்படுத்தக்கூடியவளாகவும், மனுஷனுடைய பிம்பமாகவும் இருக்கிறாள்.

கீழ்ப்படியாமையினாலே பாவம் நுழைந்தப்பின் "...உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்." (ஆதி 3:16) என்று தேவன் ஸ்திரீயினிடம் சொன்னார். ஆனால் இன்று அநேக சமுதாயங்களில் தொடர்ந்து நடப்பதுபோல, விழுந்துபோன மனிதன் பெண்ணைக் கொடுமையாக ஆட்சி செய்யவேண்டும் என்றோ, அநீதியாக அவள் அவதிப்பட வேண்டுமென்றோ, என்றுமே தேவனுடைய நோக்கமாக இருக்கவில்லை. பல தேசங்களில் ஏற்படுகிற சமுதாயத்தின் அமைதியில்லாத நிலைகளும், யுத்தங்களும் மிகுந்த மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இந்தியாவில் இந்து மதத்தின் கீழ் பெண்கள் அனுபவித்த கஷ்டங்களிலிருந்து, இப்பொழுது விடுதலைப் பெற்றுக்கொண்டிருப்பதைப்போல, புத்த மதத்தை, உயர்வாக எண்ணப்பட்ட தொலைவிலுள்ள கிழக்கு தேசங்களிலுள்ள பெண்கள் இப்போது விடுதலை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். பெண்களைக் கொடுமையாக நடத்துவதற்கும், அவர்களை இழிவாக்கும் செயல்களுக்கும் இசைவான மதக்கோட்பாடுகள் மற்றும் பாரம்பரிய கலாச்சாரத்திற்கு விரோதமான விமர்சனங்கள் இந்த உலகமுழுவதும் பரவிக்கொண்டு வருகிறது.

இந்த கடைசி காலத்தில், "பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவை சமமாக்கப்படும்" போது, (எசா 40:-4, லூக் 3:5) சமுதாயத்தில் பெண்களின் உரிமை பெருக்கத்திற்கான காரணமும் ஒரு பகுதியாக விளங்குகிறது. ஆண்டவரின் திரும்புதலுக்குப்பின் அவருடைய இரக்கங்களினால் பூமியை அழுத்திக் கொண்டிருக்கும் காரியங்கள், பெண்கள் உட்பட எல்லா அழுத்தங்களிலிருந்தும் விடுதலை பெறுவதற்கு காலம் வந்திருக்கிறது. (அப் 3:19) பூமியின் சகல காரியங்களையும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் அமைப்புகள், தங்களுக்குள் இருப்போரை ஒடுக்குவதினால் வரும் பொதுவான ஒழுக்கக்கேடுகள் நடக்கும்போது, கிறிஸ்து வருவார் என்று பேதுரு அறிவிக்கிறார். "அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம் பூதங்கள் (அரசியல், மதம், சமுதாயம், பொருளாதாரம்) வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." (11பேது 3:10) நீதிக்கான அலறுதல் - பாரம்பரிய சமுதாய அமைப்புகளுக்குள்ளும், அரசியல் அமைப்புகளுக்குள்ளும், அதிகமாகக் கொந்தளிப்பை ஏற்படுத்துகிறபடியால், எல்லா அமைப்புகளும் வலுவற்றுக்கொண்டிருக்கிறது. (செப்னி 1:14-18, எபி 12:26,27) பொதுவாக நீதி, நியாயத்திற்காக ஏக்கங்கள், எல்லா இடங்களிலும் காணப்படுகிறது.

ஆண்டவர் தன்னுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு இசைவாக மனிதனுடைய காரியங்களில் தலையிடுகிறார். தேவனுக்கு முன்பாக ஒவ்வொரு தனி நபர்களும் சமமான வாய்ப்புகளைப்பெற்று, கொடுக்கப்படும் அறிவினால் தங்களையே பூரணப்படுத்திக்கொள்வதற்கு ஆண்டவர் இருபாலரையும் (ஆண், பெண்) ஆயத்தப்படுத்துகிறார். ஆயிரவருட பகிரங்கமான ஆட்சியின்போது, நித்தியமாக பரிபூரண ஜீவனில் நிலைத்திருப்பதற்கு நிரூபிக்கப்பட்டவர்கள், இனி ஒருபோதும் தங்களுடைய இனம், ஜாதி மற்றும் வேறு எந்த காரியத்தின் அடிப்படையிலும் நியாயந்தீர்க்கப்படார்கள். முழுமையான பரிபூரணநிலை அடைந்தப்பின், தேவன் ஆதாமை சிருஷ்டித்த நிலைக்கு மனுக்குலம் முழுமைப்பெற்று, பரிபூரணமடையும்.